திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

வரகவி நாயகம்

காஸிம் புலவர்

# திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

திருப்புகழ்

வரகவி நாயகம்

காஸிம் புலவர்

# திருப்புகழ்

வரகவி நாயகம்

## காஸிம் புலவர்

மறுபதிப்பு 1970

உரிமை பெற்றது

அச்சிட்டோர் :

பாரி அச்சகம், சென்னை-1

காயல்பட்டினம் தைக்காப் புலவர்

ம. கு. செய்யது இப்ராஹீம் சாஹிப் அவர்களின்

# சிறப்புப் பாயிரம்.

——.0:——

## நிலமண்டில வாசிரியப்பா.

திருவொளி மகத்தா லருவுரு வாதி
யிருவகைத் திணையோ டியாவையும் படைத்து

முத்தொழில் புரியும் முதற்பொரு ளாகி
பத்தர்க ளுளத்திற் பதிந்தும் பதியாக்

கருத்தனைய் திவ்ய கருணை கரனை
யொருத்தனைக் காக்கு மொருபெரும் பொருளா

யாதியு நடுவு மந்தமு மிலாத
வேதமெய்ப் பொருளாய் விளங்கிய சோதி

தன்னருள் சுரந்து சமயசற் குருவா
யின்னிலம் விடுத்த விகபரக் களஞ்சியம்

நற்குண மினிமை நாணிலந் தாங்கும்
சற்குண சகாயச் சலதரக் குடைய

ரிம்மை மயக்கா லிடையுந் தங்க
ளும்மத் தவரை யுவந்தீ டேற்றுங்

கருணையங் கடலாய் காத்திம் நபியா
யிருநிலங் காக்கு மிறசூல் வேத

வறிவு மமலு மகலா தைந்து
பொறிமல மழித்த புனிதர் மேவுந்

திருப்பதி காஹிர் திலதமென்ன
வுருப்பெற் றறிவி னொழுக்கத் தமர்ந்து

தாசீன் நபியின் றரிசன மகலா
காதி மெனும்பேர் கதிக்கும் வள்ள

லொப்பற்ற வேத வுண்மைப் பொருளைத்
தப்பறத் தெளிந்து தனிநிலை பூண்டு

மறைகாட் டறிவு மாதவ நெறியுந்
துறைகாட்டு வண்ணம் துலங்கப் பெற்று

தவப்பே ரூரும் தாஹா நபியி
னுவப்பே பொருளென வுளத்திற் கொண்டு

அகர முதலவ னருமைத் தூதர்
பகரு மென்ற பதமே முதலாய்க்

கனியுந் தேனுங் கடுப்பத் திரட்டி
யினியநன் மொழியு மிலக்கண மலிவு

முதுமை நடையு மோக்ஷ வழியு
மிதுபா லுளதென் றெவரு மிசைப்பத்

திருப்புக ழென்ற தெளிந்த மதுரக்
குருப்புக ழொன்றைக் கோத்தன ரதனைப்

பற்பல விடுத்தம் பதிப்பித் துளதிற்
சொற்பொருள் பலவும் சோர்வுற் றிருப்பக்

கண்ணுற் றதனைக் களையற் கான
வெண்ணப் பெருக்கா லியன்ற வரையும்

முந்தப் பதித்த முறையே திருத்திச்
சந்தக் குழிப்புந் தனித்தனி யமைத்து



எடுத்தவ ரெவரு மெளிதிற் றெரிந்து
படித்தக மகிழப் பதிப்பித் தருளென

காசிம் புலவர் கான்முறை யாக
மாசீர் பெருக வந்த மகிப

னருந்துணை நேச மகலா தமரும்
பெருந்தன முடையப் பிரீதி யுடையோன்

வேதப் பரீட்சை வித்தக னவர்க்கு
நீதப்ர சங்க நிபுண னிராசத

மகமலி முகம்ம தப்துர் றகுமான்
மிகமன முவந்த விருப்பத் தொழுகு

மத்தனை தகமை யறிவில னெனினும்
முத்திரை தரித்த முஹம்மத ருளூ

நற்றவ முஹ்யித்தீன் நாகூர் நாயகம்
கற்றறி மாந்தர் கருணையும் வேண்டி

நயம்புக ழின்னிசை நாகையந் தாதி
பயந்தரு வண்ணம் பதிப்பித் தருளினன்

தழனுறுங் கிடங்கைத் தண்பெறச் செய்த
வெழில்நபி நாம மிலங்கு மித்தலை

மூதறி வாளர் முதிர்புகழ் தன்னை
யோதுவர் கேட்ப ருளமுறும் படியே

யருவுரு வன்றி யாமு மிறையோன்
கிருபையை வேண்டி கெஞ்சு மடியனே.

முற்றிற்று.

# நூன்முகம்

கே. பி. எஸ். ஹமீது, பீ.எஸ்ஸி. பீ.எல்., எம். லிட்.,

அரபியும் பாரசீகமும் உருதுவும் ஹிந்துஸ்தானியும் ஹிந்தியுமாகச் சேர்ந்த ஏதோ "துருக்கு" பேசும் இனத்தவராகவே தமிழ் முஸ்லிம்கள் தமிழகத்துப் பிறரால் கருதப் படுகின்றனர். இந்த அபத்தக் கருத்துக் காரணமாக, தமிழ் முஸ்லிம்களுக்கும் தமிழுக்கும் சம்பந்தம் இல்லையென்ற தவறான எண்ணம் இற்றைக்கும் பலரிடையே நிலவுகிறது.

பௌத்தமும் சமணமும் வைணவமும் கிருத்தவமும் வளர்த்த அளவுக்கு, அளவிலும் நிறையிலும் வகையிலும் தொகையிலும் தரத்திலும் தமிழை தமிழகத்து முஸ்லிம்கள் வளர்த்துத் தம் தாய்மொழிக்கு வளமும் புதுமையும் பொலிவும் சேர்த்திருக்கிறார்கள். திருமறை எனும் திருகுர்ஆனின் நெறிமுறைகளையும் திருநபிகளாரின் வழிமுறைகளையும் அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய மதாச்சாரத்தையும் பண்பாட்டுக் கலாச்சாரத்தையும் வரன்முறை பிறழாது கண்டிப்பாகக் கடைபிடிப்பவர்கள் தமிழகத்து முஸ்லிம்கள் எனினும் அவர்கள் தம் தாய்மொழியாகிய தமிழ்மொழி மீதுள்ள பற்றில் பிற தமிழகத்தோரினின்றும் சற்றும் குறைவு படாதவர்கள். ஆகவே முத்தமிழுக்கும் தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளையும் பாரம்பரியத்தையும் வரலாற்றினையும் முற்றமுற்றக் கடைப்பிடித்து அவர்கள் ஆற்றிய தொண்டு கொஞ்சநஞ்சமல்ல. முன்னூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம் புலவர்கள் நான்கு இலட்சத்திற்கும் அதிகமான செய்யுட்களை யாத்துத் தந்திருக்கிறார்கள் என்ற ஒன்றே இதற்குச் சான்று.

'முன் ஏர் சென்ற வழியே பின் ஏர்' என்பர். முன் ஏர் தேய்ந்தும் ஓய்ந்தும் நின்றும் அகன்றும் விட்ட காலத்தில் தமிழ் ஏர் ஓட்டி அறுவடைச் செழிப்புக் காணும் பொறுப்பும் பாக்கியமும் தமிழ்மொழி வரலாற்றில் முஸ்லிம்கள் மீது வந்து சார்ந்துநின்ற உண்மையை யாரும் மறைத்து விட முடியாது. அதை விளங்கிக்கொள்ள தமிழ் இலக்கியப் பரப்பில் முஸ்லிம் தமிழ் இலக்கிய விற்பன்னர்கள்



குவித்து வைத்து விட்டிருக்கும் பொன்றா இலக்கியக் குவைகளுக்குத் தமிழ் வளர்க்கப் பாடுபடும் தமிழகம் என்றாவது ஒருநாள் வந்தாகவே வேண்டும்.

தமிழ் இசைக்கும் தமிழ் முஸ்லிம்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும் என்று ஐயுறும் தமிழகத்தவரின் எண்ணிக்கைக்குக் கணக்கில்லை. தமிழர்களாகப் பிறந்து இஸ்லாத்தில் உறுதிபெற்று நிலைப்பவர்கள் என்ற காரணத்தினால் தமிழ் இசை பாரம்பரியத்தை முற்ற முற்ற வெறுத்து ஒதுக்கியோராக தமிழ் முஸ்லிம்கள் என்றுமே வாழ்ந்ததில்லை. இகலோக சுகபோகங்களுக்காக இறைவனையும் சன்மார்க்கத்தையும் விட்டுவிடச் செய்யும் தன்மை மிக்க இசை ஒன்றை மட்டுமே முஸ்லிம்கள் வெறுத்தனரே யன்றி இறைவனின் திருவருளுக்கு இதயச் சிலையைக் கறையற உருக்கும் இசையினை தமிழ் முஸ்லிம்கள் மறுத்ததில்லை. நேர் மாறாக பக்திப் பரவச நிலைக்கு இழுத்துச் சென்று மனிதனைப் புனிதனாக்கும் நற்றமிழ் இசையை அவர்கள் வளர்த்தனர். அதற்கு வனப்பும் மகிமையும் அளித்தனர்.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே தமிழ் நாட்டின் இசை வளர்ச்சி முதிர்ச்சி யடைந்திருந்தது என்பர். இசை பற்றிய பண்டை நூற்களாகிய பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், தாளவகையோத்து முதலியன இப்பொழுதில்லை. அங்கிருந்து இடைக்காலத்து தேவாரத்திற்கும் திருவிசைப்பாவுக்கும் திவ்ய பிரபந்தங்களுக்கும் வந்துவிடுகிறோம். பண்டையத் தமிழரின் இசைவடிவங்களும் ரூபங்களும் கோலங்களும் பாணிகளும் இந்தத் தமிழ் பக்தி இலக்கியத்தில் உருவம் பெற்று எதிரொலிக்கின்றன என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர். தேவாரத்தின் பண் வகைகளும் அவற்றை அடியொற்றி வந்த திருப்புகழின் தாள, லய, மெட்டு, சந்த வகைகளும் பழந் தமிழரின் இசைப் பாரம்பரிய காதத் துடிப்பின் ரீங்காரத்தை நம் இதயங்களில் எங்கோ தட்டி எழுப்புவதாக உணருகிறோம்.

இன்றைய இசைத் தமிழ் நூற்கள் "மேளகர்த்தா" என்னும் வடநூலைத் தழுவியே அமைந்திருக்கின்றன.

11, 12-ஆம் நூற்றாண்டுகளில் சங்கீத மகரந்தம், சங்கீத சூடாமணி, சங்கீத ரெத்னாகரம் போன்ற கர்நாடக சங்கீத நூற்கள் வட இந்திய சங்கீதம் தென்னிந்திய சங்கீதத்தோடு நுழைந்து உறவாடி இருப்பதைக் காட்டப் போதுமானவை. இந்தக் கலப்புக்குப் பிறகே தனித் தமிழ் இசை இரு வேறாகப் பிரியத் துவங்குகிறது. விஜய நகர ஆட்சி காலந்தொட்டு கீர்த்தனங்கள், உருப்படிகளாக உருவம் பெற ஆரம்பிக்கின்றன. திருப்பதி தள்ளப்பாக்கம் வித்வான்கள் மரபு, கோவிந்த தீக்ஷிதர், ரெங்கனாத நாயக்கர், தஞ்சாவூர் வேங்கடமகி ஆகியோர் மரபு, க்ஷேத்ரக்ஞர் மரபு என்று மூன்றாகப் பிரிகிறது, இந்தக் கர்நாடகக் கீர்த்தனை இசைப் பாரம்பரியம். தள்ளப் பாக்கம் மரபில் கீர்த்தனையில் பல்லவியும் சரணமுமே இருந்தன. பல்லவிக்கும் சரணத்திற்கும் இடையே அனுபல்லவியைப் புகுத்திய பெருமை புரந்தர தாசரைச் சாரும். பின்னர் கீர்த்தனங்களுக்கும் கர்நாடக சங்கீதத்திற்கும் சாஸ்திரீய அமைப்பைத் தந்தவர் 17-ம் நூற்றாண்டைச் சார்ந்த வேங்கட மகி என்பவர். இராகங்களை வரிசைப் படுத்தி கருத்தா இராகங்கள் என்றும் ஜன்னிய இராகங்கள் என்றும் அவர் வகைப்படுத்தி மேளகருத்தா இராகங்களை எழுபத்திரண்டாக்கினார்.

ஒரு கீர்த்தனையால் குறிப்பிட்ட ஒரு இதய பாவத்தின் உணர்ச்சி சஞ்சாரத்தை மட்டுமே வெளிக்கொணர முடிகிறது. உணர்ச்சி ஓட்டத்திற்கும் கருத்தோட்டத்திற்கும் கற்பனையோட்டத்திற்கும் தொடர்பு ஏற்படுத்த பக்தனின் உணர்ச்சிபாவங்கள் அனைத்தையும் கோத்தெடுத்துப் பரிபூர்ணமாக்குவதற்குப் பழந்தமிழ் இசைப் பாரம்பரியத்தின் வழிவரும் விருத்த பாணியினால்தான் இயலும். இக் காரணம் பற்றியே புரந்தரதாசருடைய சமகாலத்தவராகிய அருணகிரி நாதர் விருத்தபாணியில் தாளசுத்தமாகவும் அட்சர சமமாகவும் திருப்புகழுக் கென்றே வாய்த்த சந்தக் குழிப்பு என்ற வாய்ப்பாடு முறையைக் கையாண்டிருக்க வேண்டும். தத்த சந்தம், தந்த சந்தம் இன்னும் தான, தனன, தன்ன, தைய முதலாய சந்தங்களில் தாள சம்பிரதாயங்களையும் ஓசை ஒலி நுணுக்கங்களையும்



அமைத்து யாப்பு இலக்கண விதிகளோடு இணைத்து இலக்கிய மரபு வழி வந்த சுவை நயங்களையும் புகுத்தி திருப்புகழ் பாடியிருக்க வேண்டும். இந்த திருப்புகழ் பாரம்பரியம் தொன்மைத் தமிழ் இசை வழி வந்த இசைப் பாரம்பரியமாகும்.

கீர்த்தனை வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு உணர்ச்சி பாவத்தையும் பொருட் செறிவையும் கற்பனை நயத்தையும் தொகுத்துச் சேர்க்கும் இசை—இலக்கிய மரபினை உருவாக்கும் முறையில் உருவம் பெற்றவை இராம நாடக கீர்த்தனை, நந்தன் சரித்திர கீர்த்தனை. திருவிளையாடற் புராணக் கீர்த்தனை, சீறா நாடகக் கீர்த்தனை ஆகியவை. இவை பெருங் காப்பியங்களைக் கீர்த்தனைச் சுருக்கமாகப் பாடி நிற்பவை.

இராம நாடகக் கீர்த்தனையைத் தமிழுக்கு ஈந்த அருணாச்சலக் கவிராயர், தியாகராஜ சுவாமிகளுக்கு வழிகாட்டியாக விளங்கி யிருக்கிறார். நந்தன் சரித்திரக் கீர்த்தனையை எழுதிய கோபாலகிருஷ்ண பாரதியார், தியாகராயரால் மதிக்கப் பெற்றவர். முத்துத் தாண்டவரோ அருணகிரி நாதர் காலத்தை யொட்டி வாழ்ந்தவரெனக் கருதப் படுபவர். இக்காலத்தைத் தொட்டும் தொடர்ந்தும் வாழ்ந்தவர்கள் தாம் தியாகராஜரும் முத்துசுவாமி தீக்ஷிதரும் சியாமா சாஸ்திரியும் சுவாதித் திருநாளும். 16 17-ம் நூற்றாண்டுகளிலேயே தமிழில் கர்நாடக சங்கீத கீர்த்தனங்கள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. இதுவே முன் ஏரைத் தொடர்ந்து பின் ஏர் பிடித்து வளம் காணத் துவங்கிய தமிழ்முஸ்லிம் இலக்கிய கருத்தாக்களின் தொடக்க காலமாகும். தமிழில், தமிழிசையில் திருப்புகழ் பாணியிலாயினும் சரி, கருநாடக இராக கீர்த்தனங்களின் பாணியிலாயினும் சரி முழு உற்சாகத்துடனும் தெம்புடனும் முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் இசைத் தமிழுக்கு ரெங்கும், மவுசும், உரமும் சேர்க்கத் துவங்கினர். திருப்புகழை யொட்டி இஸ்லாமிய பக்தி நெறிநிற்கும் திருப்புகழும் கீர்த்தனங்களை யொட்டி இஸ்லாமிய பக்திநெறி நிற்கும் கீர்த்தனங்களும் கி. பி 17-ம் நூற்றாண்டிலேயே உருப்பெறத் துவங்கின.

"அருணகிரிநாதரின் திருப்புகழுக்கு ஈடாக இன்னொரு திருப்புகழ் இயற்றலரிது" என்ற நம்பிக்கையின்மையை முற்றாக மாற்றி அதற்கு ஈடான ஒன்றை தமிழுக்கும் தமிழ் முஸ்லிம்களுக்கும் தந்தவர் காயல்பட்டினத்து வரகவி நாயகம் காஸிம் புலவர் ஒலியுல்லா அவர்கள். திருவடிக் கவிராயர் அவர்களிடம் பாடங் கேட்டவர். இருபத்தோராவது வயதிலிருந்தே சத்திய சன்மார்க்க தீன்நெறி நின்று பொய், கொலை, கள், களவு, காமம் ஆகிய பஞ்சமா பாதகங்களுக்கஞ்சி நபிகள் கோமானாரின் கருணைக் கடாட்சத்திற்கு பாத்திரமாக விளங்கியவர். பாட்டுடைத் தலைவராக திருநபி அவர்களையே இதர முஸ்லிம் தமிழ்ப் புலவர்களைப் போன்று தேர்ந்தெடுத்துக் கொண்டவர். அருணகிரிநாதர் முருகன்மீது கொண்ட காதலால் திருப்புகழை தோத்திரம் செய்தார். 'சர்வ லோக இரட்சகனின் அருள் இறைத் தூதரின் மூலமாக அன்றி இல்லை' என்பது முஸ்லிம்களின் நம்பிக்கை. "யாரிடத்தில் அல்லாஹ்வுடைய நேசமும் அவனுடைய இரசூலுடைய நேசமும் ஏனைய எல்லாவித நேசங்களையும மிகைத்து நிற்கின்றதோ அவனிடத்தில் ஈமானுடைய இன்பம் இருக்கின்றது" என்பது வள்ளல் நபி (ஸல்) அவர்களின் திருமொழி. 'ரப்புல் ஆலமீன்' என்ற தொடரும் "ரஹ்மதுன்லில் ஆலமீன்" என்ற தொடரும் இஸ்லாமிய தத்துவார்த்த ஆன்மீகத்தில் முக்கியத்துவம் பெறுபவை. ஆலத்தின்—சர்வ லோகத்தின் இரட்சகன் இறைவன். ஆலத்தின்—சர்வலோகத்தின் இரட்சகர்—அருட்கொடை—கருணைநபி (ஸல்) அவர்கள். எத்தகைய பிரார்த்தனையையும் அருள் நபி பெருமானார் பொருட்டால் நிறைவேற்றித் தருமாறு கேட்பதுதான் இஸ்லாமிய பக்தி நெறி முறை. இந்த இஸ்லாமிய இறைநேச வழிபாட்டுமுறையை கைக்கொண்டு காஸிம் புலவர் அவர்கள் பாடுகிறார்கள்.

பாடலின் சந்தக் குழிப்பு : தனன தனனான தன்ன' தனன தனனான தன்ன, தனன தனனான தன்ன-தனனான

இந்த சந்த வாய்பாட்டில் புலவரின் பக்தி பாவ சொற்களைப் பொருத்துவோம்.



தனன—நினது, தனனான—வழியேந, தன்ன—டக்க,
தனன—நினது, தனனான—பெயரேவ, தன்ன—ழுத்த,
தனன—நினது, தனனான—புகழேப, தன்ன—டிக்க.
தனனான்—மறையோதி.

இப்பொழுது இந்த திருப்புகழ் முழுவதையும் படியுங்கள். சந்த வாய்ப்பாட்டை மனத்தில் நிறுத்தி மாறி மாறி பாடலைச் சொல்லி வரும்போது திருநபிகள் கடைக்கண் அருள்வேண்டி இதயம் குழைந்துருகும் இதமான நிலையை நபி பக்தர்கள் தம்மை அறியாமலேயே அனுபவிப்பதாகத் தோன்றவில்லையா? மறையோதி, அதனாலே, ஒழியாத, அருள்வாயே என்று வருபவற்றை 'தொங்கல்' என்பார்கள். பாட்டில் நான்கு அடிகள் இருக்கும். ஒவ்வொரு அடியையும் இரண்டாகவோ நான்காகவோ மடக்கி ஓசைக்கும் சந்தத்திற்கும் தாள, லய கட்டுப்பாட்டுக்கும் முடுகு போன்ற இசைச் சம்பிரதாயங்களுக்கும் ஏற்றவாறு இதயத்தின் பக்தி பாவத்தை கவிதை வடிவில் வார்ப்பதற்கு அசாதாரண இலக்கியப் பாண்டித்தியமும் இசைநயப் பரிச்சயமும் வேண்டும். இவ்விரண்டிலும் வல்லவர் புலவர்.

இன்னொரு பக்திரச பாவத்திற்கு வருவோம் :

பிள்ளைக் கனியமுதாம். நபிகள் நாயகத்தின் வாரானைப் பருவத்தை உளத்தே வருவித்து

'நந்தவரு நல்குரவ நரிமெய் தின்றுவிடுமு னபியே சரண நன்பினனுமதடியே கதியி னருள்வீரே' என்று இறைஞ்சும் திருப்புகழ்.

தந்த தனன தனனா தனன
தந்த தனன தனனா தனன
தந்க தனன தனனா தனன—தனதான

யிங்கு வருக வரசே வருக
நம்பி வருக மதலாய் வருக
வெங்க ளுயிரி னுயிரே வருக—வுரமுறு

வின்ப மதுர வமுதே வருக
வும்ப ரிருகண் மணியே வருக
வின்ப ரிலகு சுடரே வருக—வுயர்தீனோர்

வஞ்ச நிலவு திலகா வருக
விஞ்சு கருணை முகிலே வருக
வண்கை நபிகள் பெருமான் வருக—வெனவேகூய்

வந்து செவிலி யலிமா வினிய
கொங்கை யமுது தரவாய் பருகி
மன்றல் கமழு மதினா வளரு—மிறசூலே.

பாலமுதருந்த அன்னை அலீமா நபிமணிக் குழந்தையை அழைக்கின்ற அழைப்பின் உருக்கமெல்லாம் அமுதாக வருகிறது. இப்படியே நாலனைத்தும் தமிழ் இலக்கிய மரபு கண்ட கவிதைச் சுவையனைத்தின் பரவங்களும் கவிஞர் பெம்மானின் பக்திப் பரவச ஆன்மலயச் சுதியோடு இழைந்து குழைகின்றது. அந்த இழைவோடும் குழைவோடும் நம் இதயங்களும் இணைந்து புனிதமுறுகின்றன. இத்தகு மகத்துவத்திற்கு காஸிம்புலவர் அவர்களின் திருப்புகழ் உரித்தான காரணத்தினால் தான் அவரது ஆசானாகிய திருவடிக் கவிராயர், திருப்புகழை,

வடிகட்டிச் சங்கத் தமிழ்ப் புலவீர் எழுவான் கடந்த
முடிகட் டழகர் திருப்புகழ் வாரி முகந்து கொண்டு
படிகட் டுலகப் பரப்பையெலாம் சுற்றிப்பார்த்து விண்மேல்
கொடிகட்டித் தாவுநல் காஸிம்புலவர் கொழுங்கவியே !

எனப் பாராட்டுகிறார்.

காஸிம் புலவரது திருப்புகழுக்கு அவரின் கனவில் தோன்றி முதற்பதம் எடுத்துக் கொடுத்தவர்கள் வரிசை நபிகள் நாதர் என்பது வரலாறு. நோயகற்றும் முறையீடாக—கோமான் நபி அவர்களின் இன்னருள் வேண்டி காஸிம் புலவர் உளங்கசிந்து பாடிய இன்னிசையும் அவரது திருப்புகழோடு இங்கே இடம் பெற்றுள்ளது. பக்திப் பிரவாகத்தில் இதயத்தைக் குளிப்பாட்டி எடுக்கும் துதிப் பாடல்களுக்கு என்றமைந்த தேவபாணி முத்தமிழுக்கும் பொது என்பர். தேவபாணியை பெருந்தேவபாணி என்றும் சிறுதேவபாணி என்றும் இருவகைப் படுத்துவர். சிறுதேவபாணியின் பண்பனைத்தும் அமைந்து விளங்குகின்றது புலவர் அவர்களின் இந்த இன்னிசை. ஹிஜ்ரி 1177 துல்கஃதா பிறை 12 வெள்ளிக் கிழமை இரவு தேகவியோகமான புலவர் அவர்களின் சமாதி காயல்



பட்டினம் குத்பா பெரிய பள்ளி வாயிலினருகே அமைந்துள்ளது.

தம் காலத்தவரால் புலவர் நாயகம் எனப் புகழ்ந்தேத்தப்பட்ட ஷெய்கு அப்துல் காதிர் நைனார் லெப்பை ஆலிம் புலவர் அவர்கள், காயல்பட்டினம் தந்த வித்வ சிரோமணி. முடிவுபெறாத சீறாப் புராணத்தை அறுபத்தியொரு படலங்களில் 6787 பாடல்களை மேலும் யாத்து முடிவுறச் செய்த பெம்மான் அவர் பெரும் புலவர். குணங்குடியாரின் பள்ளித் தோழரும் சென்னை இராயபுரத்தில் அவரது சமாதியினருகேயே அடக்கம் பெற்றிருக்கும் பேறும் பெற்றவர். மக்காக் கலம்பகம், கோத்திரமாலை, சொற்க நீதி, குத்பு நாயகம் காரணப் புராணம் என்று அடுக்கிக் கொண்டே போகத் தக்க பற்பல நூற்களின்—பல்லாயிரக் கணக்கான பாடல்களின்—கருத்தா. அப்பெரும் புலவர் அவர்களின் நாகையந்தாதியும் இதில் இணைந்துள்ளது.

தமிழின் எந்தப் பகுதி அழிந்தாலும் அல்லது மறைந்தாலும் அம்மறைவையும் அழிவையும் தமிழ்மொழிக்குற்ற இழப்பாகக் கொள்ளாத தமிழ்நெஞ்சம் இருக்கக்கூடாது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியச் செல்வம் மெல்லச் செத்துக்கொண்டும் செதிலரித்த ஏடாகப் பொடிந்து கொண்டும் இருக்கின்றது அழிவினின்றும்-சாவினின்றும் இவற்றை மீட்கும் பொறுப்பு தமிழினத்தோர் அனைவரையும் சார்ந்ததாகும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியச் செல்வத்தைச் சேர்த்துத் திரட்டிப் பாதுகாத்து அவற்றின் பாங்கினையும் பண்பினையும் சிறப்புப் பெருமையினையும் கணிப்பதற்கும் ஆய்வதற்கும் தமிழகம் வகை செய்தாக வேண்டும். ஏனெனில் இவை தமிழகத்தின் பொதுச் சொத்து. இப் பணியில் இன்றும் தமிழர் குறிப்பாக தமிழ் முஸ்லிம்கள் பராமுகமாகவே இருக்கின்றனர். இந்நிலைக்கு விடிவு கண்டாக வேண்டும்.

இம்முறையில் முக்கால் நூற்றாண்டுக்கும் அப்புறம் இப்போதாவது இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கடலில் நின்றும் மூன்று முத்துக்கள் இந்நூல் வடிவில் வெளிவந்து ஒளிநல்க உதவியோர் அனைவருக்கும் இறையருள் உறுதுணை நிற்குமாக. ஆமீன்.

வையகம் வானமைத்தாளும் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே
வழுத்துகின்ற புகழனைத்தும் உரித்து

# தீன்குலத் திருமக்களே!

அஸ்ஸலாமு அலைக்கும்!

அமுதத் தமிழ்மொழி இலக்கியங்களின் வரிசையிலே அழகு படத் திகழ்ந்துவரும் அரிய படைப்பான திருப்புகழ்க் காவியத்துக்கு இணையாக, இன்நகர் காயல்பட்டினத்தில் 17ம் நூற்றாண்டில் (200 ஆண்டுகளுக்கு முன்) வாழ்ந்திருந்த இஸ்லாமிய எழிற் கவியரசு, இனி தமிழ் இலக்கிய முரசு, அஸ்ஸெய்யிதுஸ் ஸாதாத்துல் ஹுஸைனிய்யி காஸிம் புலவர் ஒலிநாயகம் (ரலி) அவர்களால் அண்ணலெம் நபிகள் பெருமான் (ஸல்) அவர்கள் பேரில் அன்புள்ளம் கனிந்து இயற்றப் பெற்ற "திருப்புகழ்" என்ற சந்தக் கவிகளையும் அன்னவர்களால் இயற்றப்பட்ட "இன்னிசை" என்ற நல்லிசைச் சரத்தையும், அன்னாரின் வழித்தோன்றலான கண்ணியமிக்க அஸ்ஸெய்யிது முஹம்மது அப்துர் ரஹ்மான் ஆலிம் புலவர் (மர்ஹூம்) அவர்களால், தென் காயலின் வெண்பாப்புலியென விளங்கிய மதிப்புயர், ம. கு. ஸெய்யிது இபுறாஹிம் புலவர் அவர்களின் ஒத்துழைப்புடன் அச்சிடப்பட்ட முந்திய பதிப்பை ஆதாரமாகக்கொண்டு அச்சிட்டு வெளியிடுவதில் அக நிறைவு கொள்கிறோம். மேலும் இவைகளுடன்,

இன் நகரில் தமிழ் வித்வசிரோமணியாய்த் திகழ்ந்து சொற்க நீதி முதலிய நற்பண்பின் பாக்களை படைத்தளித்த ஷெய்கப்துல் காதிர் நைனார்லெப்பை ஆலிம்புலவர் நாயகம் அவர்களால் நாகையின் நவமணி ஷாஹுல் ஹமீது மீரான் ஒலி நாயகம் (ரலி) அவர்கள் பேரில் இயற்றப்பட்டுள்ள, "நாகையந்தாதி" என்ற நறுமணக் காவியத்தையும் இணைத்து வெளியிட்டுள்ளோம். இதன் வாயிலாக இன்பத் தமிழுக்கு இஸ்லாமியப் புலவர்கள் ஆற்றிய பண்புப் பொற்பணிகள் எத்தகையது என்பதை தமிழ் கூறும் நல்லுலகிற்கு அறியத் தருவதிலே பெருமிதம் அடைகிறோம். உன்னதமார்ந்த இப் பாக்களை உள்ளத்தில் பக்தி கமழப் பொருளுணர்ந்து யாவரும் பாடிப் பயனடைதல் வேண்டும் என்பதே எமது நோக்கம்—வஸ்ஸலாம்.

இங்ஙனம்

P. S அப்துல் காதிர்

தைக்காத் தெரு.
காயல்பட்டினம்.

# நன்றி!

பிஸ்மில்லாஹி தஆலா ஷஅனுஹு

எனது பெருமதிப்புக்குரிய பாட்டனார் கவிமணி சங்கைமிக்க அஸ்ஸெய்யிதுஸ் ஸாதாதுல் ஹுஸைனிய்யி காஸிம் புலவர் ஒலி நாயகம் (ரலி) அவர்களால் அண்ணல் அஹ்மது முஸ்தபா ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மீது இதயங்கனிந்து பாடப்பட்ட சீர்மிகு 'திருப்புகழ்' மற்றும் சிந்தையள்ளும் 'இன்னிசை' ஆகியவற்றின் முன்னைய பதிப்பின் பிரதிகள் தீர்ந்துபோன நிலையில், ஆர்வமுடன் கேட்கின்ற அன்பர்களுக்கெல்லாம் கையிருப்பு இல்லையே என்ற கசப்பான பதிலையே சொல்லிக் கொண்டிருந்த சூழ்நிலையில். பெருமானார் புகழ்பாடும் திருவார்ந்த திருப்புகழை நாங்கள் அச்சிட்டு வெளியிடுகிறோம் என அகமுவந்து, முக மலர்ந்து கூறி முன்வந்துள்ள இன் நகரின் வைரவணிக மணிகளும், பொதுநலப் பணியாளர்களும். மெய்நிலை கண்ட மேதை மஹான் ஸதகதுல்லா அப்பா ஒலி நாதர் (ரலி) அவர்களின் வழித் தோன்றல்களுமான ஜனாப் அல்ஹாஜ் P. S. முஹம்மது ஸுலைமான் லெப்பை. ஜனாப் அல்ஹாஜ் P. S. அப்துல்காதிர் நெய்னா ஆகியோர்களின் முத்தான முயற்சியினை முழு மனதுடன் பாராட்டி எனது நெஞ்சார்ந்த நன்றியைத்தெரியப்படுத்துவதுடன் அன்னார்தம் நன்னாட்டங்கள் நிறைவாகி பொன்னுவளமுடனே புவிமிசை வாழ்ந்தோங்க வல்லவனும் அல்லாஹ்வை உள்ளார இறைஞ்சுகிறேன்.

அன்பின்.

கா. பு. மு. யூ. புகாரி மவ்லானா.

# என்னுரை

'முஸ்லிம்கள் தமிழுக்குச் செய்ததென்ன?' என்று இன்றள
வும் வினா கிளப்பிக் கொண்டிருப்போருக்கு, 'எல்லாமே செய்
துள்ளனர்' என நெஞ்சுயர்த்தி விடை கூறுமளவில் முஸ்லிம்
தமிழ்ப் புலவர்கள் தமிழ் இலக்கிய வகைகள் எத்தனையுளவோ
அத்தனையும் செய்துள்ளனர். அந்தாதி கூறி, உலாவந்து, பரணி
பாடி, கோவை யாத்து, கலம்பகம் கண்டு, தூதுவிடுத்து, பிள்ளைத்
தமிழ் பேசி, சதகம் சமைத்து, மாலை தொடுத்து, திருப்புகழ்
செப்பிய இஸ்லாமியத் தமிழ்க் கவிஞர்கள் பட்டியல் மிக நீண்டது.
தமிழ் இலக்கிய உலகுக்கே புதியதான நாமா, கிஸ்ஸா, மசாலா
போன்ற துறைகளையும் தமது பங்காக அறிமுகப் படுத்தியுள்ளனர்.

அவ்வகையில், 'உலகனைத்துக்கும் ஓர் அருட்கொடையாய்',
'அழகிய முன் மாதிரியாய்' வந்தவதரித்த அண்ணலெம் பெரு
மானார் ரசூல் (ஸல்) அவர்கள் பேரில், வரகவிநாயகம் காஸிம்
புலவர் அவர்கள் பாடிய திருப்புகழ் என்னும் இவ்வரிய படைப்பை,
காயல்பட்டினம் பெரு வணிகரும் சமுதாய நலம் பேணும் தகை
யாளருமான சகோதரர் அல்ஹாஜ் P. S. அப்துல் காதிர் அவர்
களிடம் பதிப்பித்துத் தருவதாகப் பொறுப்பேற்றுக் கொண்ட
போது உவகையால் பூரித்தேன்.

முஸ்லிம் புலவர்கள்தம் ஆக்கங்களில் மிகப் பல காட்சிப்
பொருட்களாய் காணற்கரியனவாய் ஆகிவிட்ட நிலையில் கிடைத்
தற்கரிய இதுபோன்ற இலக்கியங்கள் மறுபதிப்பாவதென்பது
உண்மையிலேயே மகிழ்வுக் குரியதாகும்

நான் ஏற்றுக்கொண்ட இந்தப் பெரும் பணியில் பூரணமாக
வெற்றி பெற்றுள்ளேன் என்று என்னால் கூற முடியாமைக்கு
வருந்துகிறேன். ஏனெனில் எனக்குக் கிடைத்த பழைய பதிப்பு
சீர் பிரிக்காமலும் வரி பிரிக்காமலும் பண்டை முறையில் அச்சி
யற்றப் பட்டிருந்ததே. என் அறிவுக் கெட்டிய வரையில் சீர்
பிரித்து, வரி பிரித்துப் பதிப்பித்துள்ள இது, படிப்போர் அதன்
சிறப்புணர்ந்து, புரிந்து படிக்க உதவுமென நம்புகிறேன்.

இலக்கண வழுக்களை, அச்சுப் பிழைகளை, அமைப்புக் குறை
களைப் பாராட்டாது பெருமானார் (ஸல்) அவர்களின் திருப்புகழை,

'வாய்மணக்க மனம்மணக்க வாய்த்தவரும் வாழ்வினிக்க
எல்லோரும் பாடிடுவோம் எல்லாமே பெற்றுய்வோம் !'

ஆசிரியர், 'முழக்கம்'
(பாவலர் பதிப்பகம்) சென்னை-1

அன்பன்,
கே. பி. செய்குத் தம்பி

பிஸ்மில்லாஹி

# திருப்புகழ்

## காப்பு

### விருத்தம்

பார்பெறுந் தண்டாச் செல்வப் பயன்றருங் கல்வி யுண்டா
மேர்பெறுஞ் சுவனத் துய்க்கு மின்பவீ டெய்து மற்றுங்
கார்பெறுஞ் செங்கை யெங்கள் கபீபிற சூலுல் லாமேற்
சீர்பெறுந் தமிழாற் சொன்ன திருப்புகழ் கூறு வோர்க்கே.

### கலித்துறை

நெருப்புகழ் கும்பிக் கிரையாஞ் சமையிக ணேம நிட்டைக்
கருப்புகழ் கேட்கவும் வேண்டுங் கொல்லோ கனகாம் புயத்தாற்
பொருப்புகள் சாய்க்கு முகம்ம துல்லாதமைப் போற்றி செய்யுந்
திருப்புகழ் கேட்டபின் றீனோர்க டங்க டிருச்செவியே.

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன—தனதான

பகரு முருவிலி யருவிலி வெருவிலி
சிறிது மொருதலை பயிலிலி துயிலிலி
பருவி னுணவிலி துணையிலி யிணையிலி விரிவான

பழைய சதுமறை முழுவது முணர்பவர்
பசிய தமிழ்வலர் துறவல ரெவருமெய்
பரவ வரிதரி தொருபொரு டிருவுள வருளாலே

மகர மெறிபொறி மறிகட லுறைபவர்
கலப மரகத மயில்வடி வுடையவர்
மறுவி றரளவெண் மணியென வமைபவ ரிறைதூதாய்

மனித வடிவினில் வருதிரு நபியென
வலிய பகலினு மிரவினு மனதினின்
மவுன முறவும திருசர ணொருதின மறவேனே

திகிரி வரையுடல் குழைதர வெழிறரு
சுவடு படவடி யிடுசய குணதர
திரைசெய் கடல்படு படுமிசை யடிநிழ றெரியாதே

திருவி னடைபயில் சததள பதயுக
வடவி பகவதன் வழிபுகு மதிஜய
திவலை மழைமுகி விடைவரு புரவல ரிமையோரு

மகில புவனமு மளவிட வரியவ
வளவு குறியவ வளவினு நெடியவ
வளவி லறுசள வளவினு மனவிய மகுடேசா

வறுவகை சமையி கடிமிர தினகர
குறைசி குலதில கமதின நகர்தனி
லரசு புரியுமஃ மதுமுகம் மதுநபி யிறசூலே.

அகர முதலவ னருள்பணி விடைதனின்
முழுது மதிலொரு செயலிலி முயலிலி
யமிர்த குணமிலி பொறையிலி நிறையிலி பெரியோர்க

ளடியின் மிசைமுடி பணிவிலி துணிவிலி
திருட னியல்பிலி நலனிலி பெலனிலி
யறவு மனதினி னருளிலி பொருளிலி பரிபூர்ண



சகல கலைதெரி மதியிலி கெதியிலி
திணையி னளவினு மறனிலி திறனிலி
சறகு நெறிபுகு மிதமிலி பதமிலி யழகான

தருண புழகித பரிமள சததள
வனச மலரடி யபையம பையமிது
சமைய மிதுநல சமையநி னருளினி யருள்வாயே

ககன வெளிமுக டிடிவன முடிவன
நெடிய சூலகிரி யதிர்வன பிதிர்வன
கதறி யலைகடல் வறிதுசு வறுவன விடையேறு

கமட முதுகுடல் குழிவன கிழிவன
வகில புவனமு மழிவன வொழிவன
கடிய விருணர கழல்வன சுழல்வன நெடிதாழி

விகுதி படவரு கடையுக முடிவினி
லணைய பலபல வுயிர்களு மகுசறு
வெளியி னணியணி நிலைபட நிறுவிய வுயிர்யாவும்

விதன மதுசெயு மனவொரு பொருண்முன
முடிகி யினியத மடியவர் படுதுயர்
விலகி யவர்பர கதிபெற வுதவிசெ யிறசூலே.

தனனதன தனனதன தானந் தனத்ததன
தனனதன தனனதன தானந் தனத்ததன
தனனதன தனனதன தானந் தனத்ததன-தனதான

அலரிமிசை தமதுதிரு நாமம் பதித்தவரு
மொருபொழுது பகலிருள வேகஞ் செய்வித்தவரு
மணியுபய வொளியைமண மேவும் புயத்தினரு
மிமையோர்வா

னறுசிலுறு புலியினவ தாரஞ் செனித்தவரும்
வரபதியின் மடியின்விளை யாடுந் திறத்தினரு
மபுசகல்பொன் முடிபகவி லாலன் றடித்தவரு மலைசூழும்

உலகுதனி லுமதுகலி மாவிண் டுமக்குரிய
மறையினறை மதுவமுத சாரம் பழுத்தொழுகு
முபநிடத மொழிதொடர்சு லோபந் தரித்தனைய
பெரியோர்க

ளுவகையொடு பணியுமிரு பாதம் பிடித்தடிமை
பரகதியி னடையவழி மானஞ் செலுத்துவர
முதவியருள் புரியவொரு காள்வந் தனுக்கிரக மருள்வீரே

விலைகொளமு தனையமது பானங் குடித்தொருவன்
வெறிகொடுயி ரனையமுது தாய்கண் கெடுப்பவவன்
விதறியும தடியினடி யாயஞ் சொலிப்புகலு மனவேதான்

விரைவின்மரு டெளியமுன மேசென் றடித்தகர
மிதுகொலென வடிகருவி யாலன் றறுப்பவனை
விழியொருகண் மகனொருகை யீனம் பொருத்துவர
முடையோரே

சலசமுகை கிழியவறு கால்வண் டுழப்பவளி
நறவருவி கடவுணதி நீரென் றுவட்டவளர்
சடைகன்பிணி முடவியநென் மூடெங் குமுத்துகவெண்
ணிலவாலே

சலிலமலர் குமுதநறு நீலங் கறித்தெருமை
முலைமுறுகி யொழுகிவிடு பாலுண் டனப்பெடைகள்
சலசரமொய் பழனமதி னுமண் டலத்துறையு மிறசூலே.

தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் தனதனத் தனதனத்—தனதான

ஒருவருக் கருமுடற் கடுவிடப் பிணிதணித்
தொருவருக் கிருபொருட் பெருகுகச் சடமமைத்
தொருவருக் கெளிதினிற் பெறவொலித் தனமளித்
தருளோடு

மொருவருக் கடுகொலைப் பகைதொலைத் திசைபடைத்
தொருவருக் கறிவினிற் சகலவித் தகம்வகுத்
தொருவருக் கவையினிற் ஜலமலத் திடர்துடைத்
திகலாழி

யெரியழற் குழியைவிட் டொருவரைச் சுவனம்வைத்
தெறிதிரைக் கடலின்மற் றொருவரைக் கரையிலுய்த்
தெமன்வினைத் துயரொழித் தொருவருக் குயிர்கொடுத்
தருள்காதி



றெனுமியர் பெயருடைக் குறிசினித் தமுவழுத்
தியநறைச் சதரளத் திருமலர்ப் பதயுகத்
தெனையிலக் கெனவருட் பணிவிடைத் தொழில்செயற்
கருள்வீரே

சரிதையிற் கிரியையிற் பொறுமையிற் கிருபையிற்
றனிமையிற் பழமையிற் புதுமையிற் றெழுகையிற்
றலைமையிற் புலமையிற் சுருதியிற் சறகினிற் றெளிவான

தகைமையிற் குடிமையிற் கொடையினிற் புகழினிற்
பொருளினிற் றெருளினிற் குறைசிநற் கிளையினிற்
சகலசற் சமையசற் குருவினிற் பெரியகற் பகவாழ்வே

யருணனற் பவளவிற் கொடிவிரித் திளவெயிற்
பருதியிற் படர்சுடர்க் கிரணம்விட் டொழுகுபுத்
தமுதெனப் படுகடற் றிருவயிற் றவதரித் தவதார

மடையமுப் புவனமப் புறமுமற் புதம்விழைத்
தொருவன்முத் திரைதரித் தொருவன்முத் தியையுயிர்த்
தருளமுத் தெனவுதித் தமையுமுத் தமவினக் கிறசூலே.

தனதன தனதன தாந்த தானன
தனதன தனதன தாந்த தானன
தனதன தனதன தாந்த தானன—தனதான

விடுமலர் தொடையொடு வேய்ந்து காரகி
னறைகமழ் விரிபுகை தோய்ந்து மாமயில்
விதுவும திலெழுதி வாய்ந்த சீதள மிகுகான

மிர்கமத பரிமள பூம்ப னீரெறி
தயிலமி டுபுழுகு சாந்த ளாவிய
விரைசெறி குழலியர் சேர்ந்த சீறடி தொழுதேவு

மடிபணி விடைசெய மூண்ட நேசனை
விகடனை யசடனை வீண்பொய் பேசிய
வகுதனை யறவிறு மாந்த மூடனை விழலான

பணிவமு நழுகலை யீங்கிச வூழலை
யவுசலை நரகிடை வீழ்ந்தி டாதெனை
யருளொடு தினதுகை தாங்கி யாள்வது மொருநாளே

உடல்வளை சிறுபிறை போன்ற கோடுமும்
மதமழை பொழியும்வே ளாம்பன் மீதினி
லுபையம தியமிரு பாங்கி லூடெழ நடுவேயோ

ருதைய பருதிதனி தோன்றல் போலிரு
மகளிரொ டுபவனி போந்து தேவர்பொ
னுலகின்வ துவைபுரி யாண்ட நாயக மணவாளா

கடையர்ம களிர்செவ் வாம்பல் வாய்முகை
தருகுர வையின்வெடி பாய்ந்து வாளைகள்
கதலிவ னமடவி பூந்து தேனுமிழ் கனியோடே

கமுகுமி டறுெடிய வோங்கு மாபல
வினியப முமிடறி மீண்டு நீர்பயின்
கழனிது யின்மதின வேந்தர் கோனபி யிறசூலே.

தனனதன தானதந்த தனனதன தானதந்த
தனனதன தானதந்த—தனதான

பழையபெரி யோர்பகர்ந்த வரியதச மாசிகண்டு
பலகருவி நூலுணர்ந்து தமிழ்மாலை

பரணிமடல் கோவைசந்தம் விறலிவிடு தூதுசிந்து
பனுவல்வகை பாடிவண்டர் தலைவாசல்

வழிகுழிய வேநடந்து தினமும்வறி தேதிரிந்து
வறுமைபெரி தாகிநெஞ்ச முழலாதே

வழுவியறன் மாயவஞ்ச மொழுகுவினை யேகடந்து
வனசமுகம் பாதமென்று பெறுவேனோ

வெழுதரிய சோதியின்ப வடிவினிழ லேமியின்க
ணிருசுவ டுறுதபண்பி னமரேசா

யிரவிமலை மீதினின் று புலியின்மிசை யேறிவந்திவ்
விருநிலவ ளாகமுந்து புகழாளா

வுழுதுவரி நீலவண் டு மழலைஞிமி றூதவிண் ட
வொளிர்மரவ மாலைதங்கு திருமார்பா

வுலவுமதி சூலுழைந்த புயல்பருதி யேதவழ்ந்த
வுகுதுமலை மீதினின்ற விறசூலே.



தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன—தனதான

கலச நிகர்முலை முகையினு நகையினுந்
திலத நறுநுத லணியினு மணியினுங்
கனக தமருக விடையினு நடையினும் விலைமாதர்

கலக மிடுகயல் விழியினு மொழியினுந்
தமிய னெனதுடல் பதறினும் விதறினுங்
கருதி யவரிதழ் பருகினு முருகினு மொழியாதூர்

பலரு நசைவசை புகழினு மிகழினுஞ்
சுகம திதமதி லடையினு மிடையினும்
பரிவி னுளமது தெருளினு மருளினு மழியாத

பரம பரகதி மருவினு மொருவினுங்
கொடிய நரகழல் சுழலினு முழலினும்
பரவி நினதடி கனவினு நினைவினு மறவேனே

சலதி யலைபுனல் புலரினு முலரினும்
புடவி யெழுநிலை குலையினு முலையினுஞ்
சயில வரைபுடை பெயரினு மயரினு மறிஞோர்கள்

சறகி னெறிமுறை பிறழினு முறழினும்
பலகை வரிமுறை பிசகினு மசகினுஞ்
சரத மொழிபுகல் புவியினி னபியென வருவோரே

குலவு தடமலர் கடுவினு மடுவினுங்
கரையின் மதகுயர் புடையினு மடையினுங்
குருகு திரிதரு வயலினு மயலினு மகலாதே

குறுகி யினவளை யமிழ்தென வுமிழ்தரு
தரள மணியின நிலவெழு பலவளங்
குடிகொ ணகரினு மிகுபுகழ் மதினவெம் மிறசூலே.

தந்தனந் தனதனத் தனதனத்
தந்தனந் தனதனத் தனதனத்
தந்தனந் தனதனத் தனதனத்—தனதான

சண்டவெங் குளறிடிக் கிணையெனத்
தொண்டவின் டதிர்குரற் கொடுவினைத்
தண்டமுங் கையிலெடுத் தகன்முழைப் பகுவாய்நீ

டந்தமென் றிகழ்கறித் திருசுழற்
கண்களுந் தெறிதழற் பொறியுகத்
தண்டிநூன் கருமணற் குழியடங்த் தெனையாவி

பண்டகன் றதைமறுத் துடல்விடுத்
தண்டமண் டலமுமொக் கதிர்தரப்
பஞ்சபஞ் செனவடித் துடறுகழ்ப் பொடியாய்மா

பங்கம்வந் துறுமுதற் றமியெனுக்
கஞ்சலென் றருளியப் பொழுதினிற்
பங்கசந் தருமலர்ச் சரணளித் தெனையாளாய்

துண்டவெண் பிறைமுகத் தழலினிற்
புண்படுங் குருதிகொட் டயிறலைத்
துஞ்சுவன் கொலைபழுத் தொழுகுகெட் டுடலூடே

துன்றுவெண் குடர்சுவைத் துயிர்குடித்
துண்டுவெங் குபிர்தொலைத் தடுகணைத்
துங்கவெஞ் சிலைபிடித் துழல்வர்மற் றவரோடே

கொண்டல்வந் தளிநிழற் குடையிடச்
சென்றுவெஞ் சுரமதிற் படுசுழிக்
குண்டகந் தெறிதிரைக் கடலெனப் புதுநீராற்

கொங்குபைங் குமுதமைக் குவளைசெய்க்
கஞ்சமுஞ் செறிதரக் கையின்விரற்
கொண்டுதண் புனலழைத் திடுமகத் திறகூலே.



தனதன தத்தத் தனத்த தானன
தனதன தத்தத் தனத்த தானன
தனதன தத்தத் தனத்த தானன—தனதான

அறநிலை தப்பிப் பிழைத்த பாவிகள்
பொருளற வெற்றிப் பறித்த வேசிக
ளயில்விழி யிட்டுப் பகட்டு ரூபிகள் வெகுமாய

மடையவ ழக்கிக் கெடுத்த நீலிகள்
வலியவ ணைத்துப் படுக்கு மோகிக
ளவசவ் ழைத்துப் பசப்பு மாரிக ளுறவாமோ

மறிதிரை சுற்றிக் கிடக்கு மாநில
நலதொழில் கற்றுப் பிழைக்க வேறொரு
வகையு மெனக்குப் புலப்ப டாதமை யதனாலே

வலுகவ லைப்பட் டிருக்கு மேழையை
விது சமை யத்திற் புரக்க வேதிரு
மனமுரு கிச்சற் றிரக்க மாயருள் புரிவீரே

பொறியுட னெட்டைக் கவட்டு காவெழு
கறைமலை யிற்றுப் பணிப்ப ரூடமணி
பொலிகுல ரத்னத் தொகைப்ப ணுடைவி முடிமீதே

பொறைவளர் சக்ரப் பொருப்பு நீள்புவி
மதிபொரு மொற்றைக் குடைக்கு ளேதனி
பொதுவர வைத்துப் புரக்கு மாணைகொள் கருணேசா

குறியமு கைக்கட் டவிழ்த்த தாமரை
நறிய பொகுட்டைக் கறித்து வாயிடை
குவளைகு தட்டிப் புனிற்று மேதிகண் வளர்நீரார்

குலைக ணெறித்துப் பழுத்த சாலியி
னுழறி யடித்துப் பகட்டு வாளைகள்
குதிகொளு மக்கப் பதிக்கு வாழ்வுடை யிறகூலே

தனனதன தத்ததான தனனதன தத்ததான
தனனதன தத்ததான—தனதான

உயிரனைய பெற்றதாயர் மனைவிதிரு மக்கள்சூழ
முறைவின்முறை மற்றியாரு முடனுண்மை

யுரனறிவு நுட்பஞான மரியகலை விச்சைவேத
முறுமொழிகள் கற்றயாவு மணிபூணை

டியன்மணிவ ருக்கைமாடை சுரபிவகை மிக்கதேசி
யிவைமுழுதி ழப்பவாவி பறிபோமுன்

இதையமகி ரக்கமாய்நின் விலையடிமை யைத்தளாம
விருசரண பத்மவீடு தரவேணும்

வெயில்விரியி ரத்னபார மகுடமுளெ யிற்றுநாகம்
வெகுதவமு ஞற்றிகாடி யெதிர்காண

விழவினது சற்பாசை யொடுபலம கிழ்ச்சிகூறும்
கலைரகொள்பரி சுத்தரூப வமரேசா

வியன்மருவு பச்சைநீல மொழுகுபொழி னெற்றியூடு
மதுரவழு துற்றுளூறு மதிசீத

வளர்கனிய ழைப்பவேலை யிலைபொதுளு கொப்பரிமுன்
வரவுதவு மக்கவாழு மிறகூலே.

தத்தத்தத் தத்தத் தனதன
தத்தத்தத் தத்தத் தனதன
தக்தத்தத் தத்தத் தனதன—தனதான

பட்டுக்கச் சிட்டுத் திகன்முலை
முத்துக்குச் சுக்கட் டியகுழல்
பச்சைப்பொட் டுத்தொட் டணிநுத லழகான

பத்மத்தட் புட்பத் திருமுக
நச்சப்புக் கொப்புக் கயல்விழி
பத்துத்திக் கொக்கப் பகலுரு வெளியாக

வெட்டுக்கட் டுச்சித் திரமனைக்
கச்சுக்கட் டிற்பொற் பணைமிசை
யெற்றுப்பொய்க் கட்டுத் தெரிவய ருடனேபோ

யிச்சைக்குட் பட்டுக் கனியிதழ்
பட்சித்தெட் டெட்டுக் கலவியி
னெய்த்துற்றுக் கற்றிற் றினமன முழல்வேனோ



தட்டுப்பட் டுற்பத் தியினுல
கச்சுக்கட் டுட்கச் சமையிக
டற்கத்திற் றுட்டக் குபிரர்க ளடர்சேனை

தத்திக்கஸ் திப்பட் டழிதர
வைப்பிற்கைப் புக்குப் பிடிமண
றப்பைச்சித் தித்துப் பொழிமழை யெனவீசி

வட்டக்கற் பட்டப் பகல்வெளி
நிற்கத்திட் டித்துக் கடையுக
மட்டுத்திட் டத்தற் புதமுத வியகோவே

மக்கத்துற் றெட்டுச் சுவனமோ
டெட்டுத்திக் கெட்டுக் கிரிபுவி
மற்றொற்றைக் கொற்றக் குடைபுரி யிறசூலே.

தனதன தனந்த தந்த தனதன தனந்த தந்த
தனதன தனந்த தந்த—தனதான

பிறர்மனை விழைந்து மண்டி வடியிடு களுண்டி ருந்து
பிறர்பொருள் கவர்ந்து கொண்டு தொலையாத

பெரியபொய் பகர்ந்து வம்பு புறமிக மொழிந்து சென்று
பிறர்குடி யடங்க லுங்கொ லறமாறி

யறநெறி துறந்து வஞ்ச மறநெறி நடந்து வன்க
ணடுகொலை புரிந்து நின்று தடுமாறு

மவமதி கலந்த நெஞ்ச னெனையடி மைகொண்டு செங்க
ணருண்மழை சுரந்தி ரங்கி யருள்வீரே

மறைமுழு வதுந்தெ ரிந்து தொடர்பவ மலங்க டந்த
மதிவல வதங்க ளின்ப முறுவாழ்வே

மறலிமெய் நடுங்கி யன்று குரைகழல் புனைந்த விந்தை
மலரடி யிறைஞ்சி வந்து புகழ்கோவே

சிறகர்வ ரிவண்டு கிண்ட நறியமு கைவிண்டு டைந்து
திவலைம ழைசிந்து கஞ்ச வயலூடே

சினைவயின் முதிர்ந்த சங்க மதியென வளர்ந்தி லங்கு
திருமதின நண்ப வெங்க ளிறசூலே.

தத்த தனதன தனனா தனனா
தத்த தனதன தனனா தனனா
தத்த தனதன தனனா தனனா—தனதான

செப்பு முலைமத கரியோ கிரியோ
பத்ம வரைகடி தடமோ படமோ கடைதானேர்
செச்சை நறுநுதல் சிலையோ கலையோ

செய்க்க ணனகடை படியோ பிடியோ
விக்கு மொழிகடெள் ளளியோ கிளியோ குழையூரு
செக்க ரிதழ்துவ ரிலவோ வலவோ

மப்பு மதர்விழி வடுவோ கடுவோ
நெய்த்த குழலளி யினமோ கனமோ வெனமாத
வற்ப நுணுகிடை கொடியோ துடியோ

ரற்பின் வடிவிய றனையே வினையே
னித்த மனதினி நிலையா துணையே தொழுவேனே
யச்ச மறமலர் புரைசீ ரடியே

முப்பு வனமொளிர் மதியே நிதியே
பச்சை மயிலிய லுருவே குருவே கிடையாத
முத்தின் வளர்திரு வொளிவே தெளிவே

முத்தி தருமொரு கருவே தருவே
பத்த ரமரர்கண் மணியே யணியே வருபேறே
முற்று மடியவர் பொருளே யருளே

மைப்ப டலமுகி லினமே லனமே
ணட்பி னுழுனர்கள் படைமேன் மடைமேன் னெடுமாட
மட்டு விரிமல ரளிமேல் வெளிமே

வச்சிர மணிபுனை கொடிமேன் முடிமேன்
மொய்த்து மிகவுகழ் கயலூர் வயலூர் விறகுலே.
மக்க நகர்வளர் பெருமான் மருமா

தனதான தானதத்த தனதான தானதத்த
தனதான தானதத்த—தனதான

வெடிசூலை மேகவெட்டை குறைநோய் மூவா றுகுட்டம்
னதிசார
விஷபாக நீர்கரப்ப



வெகுதாப நாவறட்சி க்ஷயமீளை வாதபித்தம்
வெறிகாச நோயிளைப்பு முதிர்சோகை

கடிதோஷ மேநடுக்கல் புரையோடி நீள்புண்வைத்த
களமாவி யாதிமுற்று மணுகாதே

கருணைக ராவெனக்கு னபிமான மாயிணைத்த
கழல்வீடு சேரமுத்தி தருவாயே

யிடையூறி லாதுவைத்த பதினாலு லோகமுற்று
மினிதேப ராபரிக்க வெனனாடி

யிரவேபி ரானழைத்து மறைவான காரியத்தை
யெதிர்பேசி யேயனுப்ப வருவோரே

மடைவாய்வ ரால்கடத்த வயலேயிறால் குதிப்ப
மதகேசு றாவுழக்கி வெடிபாய

மடுவூடு மூசுநெட்டை நெடுவாளை பூகமொய்த்த
மடல்கீறி வாவுமக்க மிறகுலே.

தனதன தனனத் தனனத்
தனதன தனனத் தனனத்
தனதன தனனத் தனனத்—தனதான

கனைகுழல் குலையக் குலையச்
சிலைநுதல் குவியக் குவியக்
கயல்விழி புரளப் புரளத் தடமேரு

கதிர்முலை குழையக் குழையத்
துடியிடை பதறப் பதறக்
கனிமொழி குழறக் குழறக் கயிலீலப்

புனைவனை சிதறச் சிதறத்
தெரிவையர் திரிகித் திரிகிப்
புணர்பல கலவிப் புலவிச் சமராடி

புதுமயல் பெருகப் பெருகத்
தினமிதழ் பருகிப் பருகிப்
புளகமெய் தழுவித் தழுவித் திரிவேனை

சுனையறல் சுவறச் சுவறக்
குபிர்நிலை பெயரப் பெயரச்
சுடுகன றணியத் தணியத் திகழ்கோயிற்

சுதைமதில் சிதையச் சிதையச்
சிலைதலை கவிழக் கவிழச்
சுரரடி பரவப் பரவத் திறன்மேவப்
பனிமதி சுழலச் சுழலக்
கவியிருள் கதுவக் கதுவப்
படர்புகழ் தவழத் தவழக் குடையான்முப்
படிநிழல் குளிரக் குளிரத்
தனியருள் புரியப் புரியப்
பயிறரு மதினப் பதிபுக் கிறசூலே.

தனதன தனன தனதன தனன
தனதன தனன—தனதான

மழலையி னிசைய சிறையளி முரல
மதுவுமிழ் சலச மணிமார்பா
மலர்திரி புவன மொருநொடி யளவின்
மனுநிலை புரியு மிறைதூதே
யெழுபது துகிலு மொருபகல் புனையு
மெழிலமர் மகளிர் மணவாளா
வெளியரி லெளிய பயல்வழி யடிமை
யெனைமன நெகிழ விடலாமோ
வொழுகொளி நிலவு சிபுரியி லொருவ
ஞெகிகொடு வரவுண் மகிழ்நேயா
வொளியெழு கடலி னெழுகதி ரிரவி
யொளிகெட வொளிரு மழகேசா
வழகிய பசிய மரகத கலப
வணிமயில் வடிவ முறுகோவே
யமரர்வி ணுலகு மகிலம ணுலகு
மரசுசெய் கருணை யிறசூலே.



தனதன தனன தனத்த தனத்தன
தனதன தனன தனத்த தனத்தன
தனதன தனன தனத்த தனத்தன—தனதான

அயில்விழி குவளை வடுக்கள் வடிக்கணை
குயின்மொழி யமுது வருக்கை சருக்கரை
யலர்முலை குமிழி பொருப்பு மருப்பிணை யெனமாத
ரழகிய வடிவை மதித்து மதித்துயர்
புலவர்கள் கவிதை படித்த பயித்திய
மறவுமென் மனதை வதைக்க வடிக்கடி யவர்மோக
மயலெனும் வலையை வனைக்க வகப்படு
பறவையி னுழலு மவத்தன் மனத்தினின்
மருள்வதை விலகி யுமக்க டிமைப்படு பெரியோர்கண்
மவுனமு நெறியு மனத்தி னழுக்கறு
சரிதையின் மருவி யிருக்க வெனக்கினி
மலர்புரை யுபைய பதத்தை யளித்தருள் புரிவீரே
யியலர மகளிர் தமக்கு ளிலக்கண
வொருமட வரலை விருப்பின் மகத்திறை
யெழுதியிவ் வழகு படைத்த மடக்கொடி யுளதாயின்
இவண்மண முடியு மெனக்கி ளியைக்கயில்
சிபுரியி லுமது கரத்தி னளிப்பது
மினமுறை யவர்கை கொடுப்ப வெடுத்தவர் விடுதூதா
வியனகர் மதின வரைப்பி னளப்பில
ரிணையமெய் வடிவி னரைத்தெ ரியப்பெயர்
வினவிய பொழுதபு பக்கர்வ ரத்தருண் மகளார்தம்
விகசித குணவ டிவைத்தெ ரிசித்தவ
ரணையமெய் வடிவி னுமிக்கி தெனச்சொல
விரைவினில் வதுவை முடித்து நடத்திய விறசூலே.

தனதனத் தனதனத் தானன தானனத்
தனதனத் தனதனத் தானன தானனத்
தனதனத் தனதனத் தானன தானனத்—தனதான

குடிலனைக் கபடனைக் கூராத மூடனைக்
கசடனைத் திருடனைக் காமாவி காரனைக்
குயவனைக் கயவனைக் கோள்பேசு நேசனைப் பலசோலிக்

குழுவனைக் கழுவனைக் கோமாளி வீணனைப்
புலைஞனைக் குலைஞனைப் பூராய மாயனைக்
கெடுவனைத் துடியனைக் கோண்மா துரோகனைப்
படர்தீமைக்

கொடியனைப் படிறனைக் கேளாவி ரோதனைச்
சிதடனைச் சதியனை தீனோர்க ணீசனைக்
கெறுவனைச் சிறுவனைக் கேடார்சொ ரூபனைக்
கடைநாளிற்

கெழுமழற் குழியினிற் போய்மூழ்கி டாதுசற்
றமுதகட் கடைவிழித் தோர்போது கூயமிக்
கெதிபெறத் துணைமலர்ச் சீர்பாத நீயளித்
தெனையாளாய்

கடுநடைச் சிறியகட் பேழ்வாய்வி லாழிவிட்
டெறுதுளைப் பனையினெட் டோர்காள மூதுகைக்
கறையடித் தழைசெவிப் பேராறு போலுவட்
டெழுதாரைக்

கரடமுத் தெறிகடக் கோடேறு கூனுடற்
குழவிதழ்ப் பிறைமருப் பேர்சூழ்ப டாமணிக்
கரியதற் பருகிழற் பால்கோப வேரறத் தெவர்சேனைப்

படைகளைத் துகள்படப் போராடு தாழ்வலித்
தழைகளைத் தறிகளைத் தானூறு மாடகப்
பசியபொற் புகர்முகத் தாறூடு பாய்கவுட் புயலேறி

படுகுரற் கழைகழித் தால்சீறு மாலுடைக்
கவளநற் றவளவெற் பேரானை மீதினிற்
பவனிபொற் பதிவரத் தானூரு மாரணத் திறகூலே.

தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன
தனத்தந் தானன தானன தானன—தனதான

செழிக்குங் காரறல் வேள்படை வீடினி
தளிப்பைங் காவொடு நீணிற மாமணி
செருக்குந் தேனின மாமுகில் கூரிருள் விரிபானை



செலத்தின் பாசியெ லாம்வெல நாவியு
மணக்குங் காரகி லாவியு நீவிய
செறிக்குந் தாரள காடவி மாதர்கண் மூலைமேவு

முழுச்சண் டாளனை வீணனை வாழ்குடி
கெடுக்குங் கோளனை யீனனை நீள்பழி
முடிக்குங் கூழனை மானெடு நீலனை மறைநூலின்

முறைப்பண் பானட வாதநிர் மூடனை
யழைத்துன் சேவடி யானித மேதொழ
முகச்சந்த் ரோதைய நாண்மலர் போல்விழி யருள்பாரா

தழைக்குந் தூயக லாமதி யாமென
முளைக்கும் பேரிய தூவியு மீதெழு
தனிச்செஞ் சூரிய னுதப மாமணி யெனநீடு

தருக்குஞ் சீதள வாசமு மாமர
கதப்பைந் தோகையு மாய்நெடு நீர்புடை
தரிக்கும் பாரணு காசிபு ரீவிறை யருளாலே

வழுத்துஞ் சீர்பய னேடுரை யாடிட
வெழுத்தொன் றேயறி யாதுகு ரூனதை
வடித்தன் பாலுணர் காரண வானவர் முடிதாழ

வணக்கும் பாதச லாமிட மூவுல
கனைத்துந் தானினி தாருயிர் போன்மென
வளர்க்குந் தாயென வாழ்கிரு பாகர ரிறகூலே.

தனன தான தனதான தனன தான தனதான
தனன தான தனதான—தனதான

உலகின் வாழ்வு துறவாத மகளி ராசை மறவாத
வுறுதி ஞான முயலாத முதலோனை

யுபைய கால நினையாத சறகி னீதி நடவாத
வுறுகண் மாய மொழியாத படியாத

கலைக டேடி யுணராத மறையை யோதி யறியாத
கரும பாகை தெரியாத வினையேனோர்

கவலை தீர வொருபோது முடுகி வீடு பெறவேது
கனவி லோர்கை யடையாள மருள்வீரே

மலையி னுடி யொளியாத மயில்வி னேடி யடையாத
மதநி லாவின் முகிழாத மலரேசீர்

மருவு வேன லழலாத பருதி சோதி குறையாத
மருவி வாச மறையாத மணியேநீ

ரலையி னூடு விளையாத வமுத நீழ லெவராலு
மறியொ ணாத தருவேநின் வழியான

வடிய ரோடு புவனாதி முடியு நாளில் வடிவான
வமரர் நாடு குடியேறு மிறசூலே.

தனதத்தன தத்தன தத்தன
தனதத்தன தத்தன தத்தன
தனதத்தன தத்தன தத்தன—தனதான

கலகக்கடை வெட்டிம ருட்டிகன்
முலையிற்றுகி லிட்டும றைச்சிகள்
கடையிற்றிரி பற்பர மட்டைகண் முகமீதே

கனபச்சிலை யிட்டுமி னுக்கிக
ணகையிற்பிறர் சித்தமு ருக்கிகள்
கமுகிறகுர லெட்டு மெழுப்பிக ளெவரேயும்

வலியப்புணர் துர்ச்சண பெட்டிகள்
விரகத்தின்ம யக்கிமு யக்கிகள்
வசனத்தின முப்பும முப்பிக ளிளைஞோர்பால்

வருகைப்பொரு ளைத்தின மெத்திகள்
பலவித்தைப டித்தச மத்திகள்
வடுவைத்திடு கெட்டப ரத்தைக ளுறவாமோ

புலமைத்தொழில் கற்றஜ யக்கரு
பெனுமிக்கக விப்புல வர்க்கொரு
புகல்குற்றம கற்றிவி ருப்பொடு திருமேனி

புனைமுத்திரை பெற்றது வைப்பினில்
விலைபெற்றது முத்திகொ டுப்பது
புகழ்மெய்ப்பரி வட்டம ளித்தருள் கொடையாளா

குலவப்படு முற்செய்வி னைத்தொடர்
வினையொக்கவ றுத்தும னுப்பயிர்
குளிரக்கரு ணைப்புன லிட்டரு ளியகாவே



குறைசிக்குல வற்புத வுற்பன
நபிகட்கொரு கற்பக மொத்திடு
குவளைத்தட மக்கந கர்க்கிறை யிறசூலே,

தனதன தத்தன தந்தா தனதன
தனதன தத்தன தந்தா தனதன
தனதன தத்தன தந்தா தனதன—தனதான

வலையிடை பட்டக கம்போ லகிழ்படு
சுழிவிழு மத்தக கம்போ லிறைபுனல்
வனமகல் புட்பவ னம்போ லலர்துளி மழைகாணு

வடகுப யிர்க்கண்மு கம்போ லதிர்புய
லிடியுறு சற்பவி னம்போ லிளமையின்
வறுமைப டைத்தச னம்போ லவம்வரு முதிர்காலி

னலைகட லுற்றக லம்போல் வெறிகொடு
மதிமருள் பித்தன வன்போ லனைபிரி
யழுகுழ விச்சிறு வன்போ னயசுய கவிபாடு

மரியசொல் வித்வம னம்போ லுயிர்நிலை
தளர்வினை யெக்கிரு கன்போ லினியநி
னழகிய சொற்கப தம்போன் மலரடி யருள்வாயே

கலைசுடர் விட்டகொ ழுந்தே நிலவிய
புகழ்திகழ் பொற்பெழு குன்றே நறைவிரி
கமழ்துள சிச்சிறு கன்றே சிபுரியில் பிர்யமோடே

கருதியெ டுத்தகு ழந்தாய் வரமுறு
நபிகட மக்கொரு நம்பீ பரிவொடு
கருணைகொ ழித்திடு கொண்டால் வழிபடு புகழ்தீனோர்

குலதில கத்தக ளங்கா சுவையமு
தெனமது ரித்தக ரும்பே குபிரருள்
குலையவு தித்தெழு திங்கா ளறநெறி மதிவாழ்

குறைசிக ளுக்குவி ருந்தே வியனுல
கமரர்க ளுக்கும ருந்தே யுயர்வுள
குபைசும லைக்கணி ருந்தே தவமுய லிறசூலே.

தனந்த தனந்தன தந்தன தந்தன
தனந்த தனந்தன தந்தன தந்தன
தனந்த தனந்தன தந்தன தந்தன—தனதான

அரும்ப சும்பொன சும்புத சம்பிரு
குரும்பை கும்பகு டஞ்சல சந்தரு நீர்தான
மரும்பு தண்கல சந்திகழ் பந்தின
மலங்கு பைங்குமிழ் செஞ்சிமிழ் குஞ்சர
மிலங்கு கொம்புவ ளஞ்சிறு பம்பர னவிர்சோதி
மகன்ற குன்றம டங்கலும் வென்றுபொ
வருஞ்சு ணங்குப ரந்தணி பம்பர
முகந்தெ றிந்துகு ழந்தையி ளம்பிறை மணிமாலை
வடங்கி டந்துக லங்குடி கொண்டுபன்
வயங்கு செங்கள பஞ்செறி குங்கும
மழைந்த சந்தன வண்டவி டும்படி லுழல்வேனை
வளங்கு கொங்கைம டந்தையர் பங்கினி
கரும்பி னங்குள விஞ்சியி லஞ்சிமெ
லரம்பை சண்பக மஞ்சளொ டிஞ்சிகள் குளிர்பாலை
கடம்பு சம்புசெ ருந்திகு ருந்தலர்
கமழ்ந்த தெங்கில வும்பல வும்பல
வளர்ந்தெ ழுந்தவ ரம்பின்வ ளங்கனி மதிநுவாழ்
கனிந்த தண்டலை யம்பழ னஞ்செறி
திருந்து வஞ்சநெ டுங்குபி ரண்டலர்
தொடர்ந்து பின்செலல் கண்டுபொ தும்பறை முறைவாய்நூல்
திறங்கி டந்தர வந்துபு குந்திட
சிலம்பி வந்திட வண்டச மென்சுவ
டவண்க ரந்திட வண்புயல் கண்டுயில் யிறகூலே.
சிறந்தி டுந்தவு றென்றெரு குன்றுறை

தனதன தந்தன தானு தானன
தனதன தந்தன தானு தானன
தனதன தந்தன தானு தானன—தனதான

வறுமையெ னும்படர் தீயா லேயென
துடலினு றும்பிணி நோயா லேபசி புலையாடை
வலியடு மின்சுவை யூணு லேயிடை



வகையது வொன்றுமி லாதா லே கொலை
களவுபொய் குண்டணி கோளா லேதினம்
வறிதினி றைந்திடு தாழ்வா லேவிலை மடமானர்
உறவுசெய் தின்புறு மாலா லேகொடு
மறநெறி வஞ்சனை சூதா லேதனி
யுலகினு ழன்றவ மேவாழ் நாளதி லுறைவேனை
வுறுபகை யின்கொடி யேனு னுலுநி
னடிமையை நின்கை விடாதே மாமன
முருகியி ரங்கிவி ேணார்மேல் வீடினி யருள்வாயே
யறநெறி நின்றகு ணுளா மாசுறு
குபிர்நிலை யண்டலர் பேரே றேமுடி
யரசர்வ ணங்கிய கோமா னேயொரு பொருளாதி
யமுதுவி ருந்திட வார்கோ வேயொளி
சுவனவ ரம்பையர் பூமா னேபொறை
யறிவின்மி குந்துயர் பேரா ளாவள மதிநுவாழ்
குறைசிக டங்குல தீபா தீனவ
ரினியக ரும்..டு பாகே யாருயிர்
குளிரும ருந்தமு தேநா வாணர்க டருவேசீர்
குலவுஜெ யம்பெறு தாசீ மேயிறை
யறுசின டங்கெழு யாசீ னேயுயர்
குறுசிணு றைந்தருள் காசீ மேகபி யிறகூலே.

தனனதன தானதன தத்தான
தனனதன தானதன தத்தான
தனனதன தானதன தத்தான—தனதான

விரைகமழ்ப டீரகள பத்தேய்வை
பரிமிளச வாதுநறை கற்பூர
மிர்கமத வாசநிறை கஸ்தூரி பனிநீரின்
விரவியிடு சீதகல வைச்சேறு
கமகமென மாயமிடு கெட்டூர
விலைமதன வாடைகுளி ரப்பூசி யதன்மீதே
பருமணிக ணீலவயி ரக்கோவை
மதிவடமு லாவுசவ டிச்சோதி
பளபளென வீசுமொளி மிக்கான மூலைமாதர்

பவளவித ழூறல்பரு கிப்பூர்ண
கலவியனு போகமுழு கிப்பாவி
பகலிரவு வேறோர்செய லற்றாவி சுழல்வேனோ

மரகதம யூரவடி வுக்கார
வளவிடவொ ணாதபொறு மைக்கார புவியூடே
மதுரகவி வாணர்புதை யற்கார

மலரடிப டாதபுது மைக்கார
வடியவர்கண் மீதுகிரு பைக்கார நெடிதான
மலையினொடு பேசும்வலு மைக்கார

விருமைதரு வாழ்வுநிலை மைக்கார
பரசமைய காபிர்கல கக்கார விறகுலே.
விலகுமொரு சோதியுற வுக்கார

தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன
தான தானன தத்தன தத்தன—தனதான

ஆதி நூன்முறை தப்பிந டக்கவு
மூரி லாதவ ளப்பைய ளக்கவு வெகுகோப
மாரை யாகிலு நட்டம்வ ருத்தவும்

வாண்வ காமம யக்கம்வி ழைக்கவும்
வேறு ளோர்குடி லச்சைகெ டுக்கவு வடமீன
மார பாரம கத்வம டிக்கவும்

மாத ராருட கற்பைய ழிக்கவும்
லோக வாழ்வைநி லைப்பென நிற்கவும் நிதிசேர
வாற பேர்பொரு ளெத்தியெ டுக்கவும்

வாரி வாரிய வத்திலி றைக்கவு
மேலை யோர்கள் கருத்தைமு றிக்கவு முறுவேனோ
மாய மாரிச வித்தைப டிக்கவு

கோதின் மால்வரை வெற்புவெ டித்தத
னூடு காரண வொட்டகை பற்பல னநல்வோரே
கோல மாயொரு முப்பது பத்துட



கோடிநீரற வத்திய கட்டைக
ணீடு பாசிலை யிட்டுமு கைத்தலர்
கோடி கோடிப முத்துதி ரக்கனி தருவோரே

சோதி நாயகன் முத்திரை யிட்டொரு
காத நானம ணக்கும ளிப்பிடர்
தோளின் மாநில வைப்பினை வைத்தரு ணயினாரே

சோலை மாமயில் சுற்றம யிற்குல
மாடு நாண்மலர் மட்டுவி ரித்தலர்
சோலை சூழ்திரு மக்கந கர்க்கிறை யிறசூலே.

தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்—தனதான

கரியவரி வண்டுகின் டுஞ்செழுங் கொண்டலுந்
திலகமொளிர் கின்றவெண் பிஞ்சிளந் திங்களுங்
கடலமுது வஞ்சநஞ் சுண்டபைங் கெண்டையுஞ்
சுவையூறு

கனிமதுவி ருந்திதங் கொண்டசெந் தொண்டையுஞ்
சிறுபிறைவ டங்கிடந் தம்பருஞ் சந்தமுங்
கலனொடுசு மந்தெழுங் குன்றமுங் கொண்டுதன்
றிரிதானே

தருவெனவி ருந்துமன் றெங்கணுஞ் சந்தியும்
பிறர்மனைவி கண்டுகண் டின்புறுந் தொண்டநன்
றெரிகலைம றந்துபின் சென்றணைந் துந்திரிந் துழலாதே

திருவுளம்பி ரங்கிவந் தஞ்சலென் றென்றுநும்
பழவடிமை யென்றுவந் திங்கடைந் தன்பொடுந்
திதிபெறவி ரண்டுதன் கஞ்சமென் செஞ்சரண்
டருவீரே

குருதிகமழ் தந்தவெங் குஞ்சரங் கந்துகந்
திகிரியிர தம்பெருந் தண்டுடன் பண்டெழுங்
குறுகலரை நைந்தகந் துங்கவுந் தம்படுங் களமீதே

கொடிகழுகி னங்களுஞ் சம்பொடுங் கங்கமுஞ்
சிவல்குறள்சு ணங்கனுஞ் சொந்தமென் றுண்கவன்
சுடர்தசைவி ருந்திடுந் துங்கவெண் சிங்கமொன்
றணைவோரே

பெருகிருள்செ றிந்திடுங் கங்குலின் சந்திரன்
கலையுடல்வ கிர்ந்தபங் கொன்றிழிந் திம்பரின் கலிமானீள்
பெரியவன கம்புகுந் தும்பெயர்ந் தும்பரின்

பிரியமொடு ணர்ந்துணர்ந் துங்கடங் கஞ்சுகந்
திகழ்கரம மைந்துயர்ந் தொன்றொடொன் றென்றலும் மிறகுலே.
பிறபலமி குந்துநின் றம்பரன் றம்பகம்

தான தானன தத்தன தந்தன
தான தானன தத்தன தந்தன
தான தானன தத்தன தந்தன—தனதான

மாத ரார்புண ரிச்சையின் வந்துறு
மேக மானது பட்டதொ ழிந்தபின் நறுநான
வாத சூலைபி டித்துமு டங்கிட

வாச மேனிவெ டித்தசி ரங்குக
ஞசி னூடுகி ளைத்தகி ரந்திகள் கொசுகோடே.
வாயி னூடுபு ழுக்கள்சொ ரிந்துமொய்

ஏது மீயும ரிப்பது கண்டுபி
னூலு பேருந கைப்பவ ருந்தியு விருபோது
வீர நீயர சப்புகை யுண்டற

மேழு நாளுமெ டுத்துவ ழங்கிட
லோக லோபனெ னப்பெயர் கொண்டுழ தொருநாளே
லேழை யேனைய னுக்கிர கஞ்செய்வ

வேத வாய்மைம ணக்கும லங்கிர்த
நாவ லோர்கள்ப டிக்குந லந்திகழ் மூடையோரே
மேலை யோர்கடு திக்கும ருப்புக

வேலை நீர்கைம டுத்துமு ழங்கிய
சாள மேகநி ழற்றிய வன்குடை வியகோவே
மேவி மீதுக வியப்பாந டந்தரு



ஆதி சேடனெ டுத்தநெ டும்புவி
யூட பூஜகின் மற்கொடெ றிந்தழ
லால காலவி ஷத்தைய ருந்திய பெரியோரே

யால வாயினு டைத்தக ரும்புமிழ்
சாறு சாலிவ யற்கணி றைந்தய
லாறு பாய்மதி னத்தின்வ ளர்ந்தரு ளிறகுலை.

தனன தந்த தத்தத் தனந்த
தனன தந்த தத்தத் தனந்த
தனன தந்த தத்தத் தனந்த—தனதான

அருண தண்டை யிட்டுச் சிலம்பு
கலக லென்று கத்தச் சதங்கை
யடிபு னைந்து மைக்கொத் திருண்ட குழல்சோர

வளைபு குந்து கட்டிப் பிணங்கு
கலவி யின்ப மிச்சித் தெழுந்தெ
னருக ணைந்து வெட்கிக் குழைந்து முலைமேவு

தருண மென்று கட்டுற் றசென்று
தனையெ றிந்து விட்டுத் தொடர்ந்து
சலவை முந்தி தொட்டுக் கலந்து புணர்மாதர்

தயவி கந்து சொற்கத் தையன்பி
னுதவ வந்து ரட்சிக் கவின்று
சமைய நன்று திட்டித் திரங்கி யருள்வீரே

மரக தங்கண் முத்துச் சிறந்த
வயிர டொன்ற மொய்த்துச் சிவந்த
மணியி னங்கள் வைத்துச் சமைந்த துகில்வாரோர்

மகிழ வங்கெ டுத்துத் திரும்ப
முதல்வ னிங்க னுப்பப் பறந்து
மருவி ரிந்த வெற்பிற் கொணர்ந்து சிபுரிலா

மிரவு தங்க பட்டுக் குளெத்த
உலக மெங்கு மொக்கத் துலங்க
வினிது கண்டு கத்தற் குவந்த ளிறகுளா

மெனவ ழுங்கு பட்டத் தையன் று
தரவி யந்து திக்கெட் டுவென்றி விறகூலே.
யிசைவி ளங்க மக்கத் திருந்த

தானா தனதன தத்தன தந்தன
தானா தனதன தத்தன தந்தன
தானா தனதன தத்தன தந்தன—தனதான

பூமா மழைதுளி முத்தம் வழங்கிட
வீழ்தா மரையிலை பெற்றுள லங்கிமெய் விளையாதே
பூனா துருள்பொழு துக்கும னந்தனி

பூமா னொருவன ளித்தபெ ரும்பொருள்
பேரா சையினொடெ டுத்துமு னஞ்செய்த பொதுமானா
பூசா பலமென வைத்திடு நன்றியில்

ராமா வெனவுயிர் நக்கியு றுஞ்சியென்
வானா லதனைவ தைக்குமு னெஞ்சினி விலையேனே
லாலோ சனைசெய்து குற்றமி குந்தவெவ்

யானா லுமதுள்பொ ருத்தமி ரங்கிநல்
வீடே தருமிரு பத்மப தந்தனை வரவேணும்
யாரா தனைசெய்தி ருக்கவ ரந்தர

வாமான் மறிபசு வொட்டகை வெம்புலி
கோதா பரிபுவ னத்தொடு தெண்டிரை தருவோடும்
வாழ்மீ னொடுபுலர் கட்டையொ டும்பல

வானூர் மதியொடு பட்சியொ டென்பொடு
வாதா சனனொடு வெற்பினொ டுந்திரு புகழாளா
வாயா லறிவுகள் செப்பிம கிழ்ந்திடு

தேமா வமுதப ழுத்தொழு குங்கனி
பூவார் கதலிவ ருக்கைத ருங்கனி வயலூடே
தேனா ரொழுகியு வட்டெனு தண்பனை

சேதா முலையின்ம டுச்கள்சு ரந்திடு
பால்வீர் விடவொரு மித்தெகி ணம்பயில் மிறகூலே
சேலார் புனல்வள மக்கமி ருந்தவெ



தானன தத்தத் தனந்த தானன
தானன தத்தத் தனந்த தானன
தானன தத்தத் தனந்த தானன—தனதான

காரிருள் முற்றிக் கனிந்த தோமதி
மேல்விடம் வைத்திட் டிருண்ட தோவறு
காவின மொய்த்துக் கிடந்த தோகுழல் வெளிதானோ
காமனி லைப்பட் டிருந்த தோவுட
றேய்பிறை நெட்டைக் கொழுந்த தோமழை
காலமின் வெட்டிக் கரந்த தோவிடை குயில்பாடு
மாரமு தச்சொற் கவர்ந்த தோகனி
பான்மது விட்டுக் கலந்த தோசுவை
யாலையின் வட்டுக் கிசைந்த தோமொழி யெனமாத
ராசைவ லைக்குட் படிந்தி யானனு
போகம யக்கத் தடைந்து போயவ
ராணைமு லைக்கட் புணர்ந்த தீவினை யகலாதோ
பூரண பட்சத் தெழுங்க லாபரி
லாமயில் கச்சித் தலம்பு தேனவிழ்
பூகம டற்கொத் தவிழ்ந்து சீதள மணவீசும்
பூவிரி யைப்பைப் புயங்க மாமென
வீறொடு கொத்திப் பிடுங்க வேவெகு
பூசல்வி ளைத்துற் றிருந்து வாய்வரு மலர்சோலை
பாரவி ரத்னக் குதம்பை தாழ்குழை
யூடுகு தித்துப் பெருங்கண் மாதர்கள்
டாவியி னஞ்சூல் வெள்ளையென மேக
மூரிவ ரம்பார் கொய்யடிய நாரை யெழுவாவி



மூழ்கியெ ழுந்தே துள்ளிமதர் வாளை
பூகந றுந்தேன் வெள்ளிமடல் கீறு
மூவல குஞ்சீர் செல்லுமதி லைவி விறகுலே.

தனந்த தத்ததன தான தானன
தனந்த தத்ததன தான தானன
தனந்த தத்ததன தான தானன—தனதான

கரும்பு வட்டினிய சார மோமது
ரசம்ப ழுத்தொழுகு சீனி யோசுவை
கனிந்த புத்தரச தாளி யோவடி யிடுபாகு

கலந்த சர்க்கரைபெய் பால தோகனி
நலந்தி ரட்டமிர்த பான மோமொழி
கவின்கு ழைத்தெழுது பாவை யோவடி வியன்மேனி

யரும்பு கற்றயிள ஞாய ரேதனி
கடைந்த பொற்பதும ராக மோயமு
தசம்பு வட்டவெணி லாவ தோமுக மெனுமோக

வரம்பை யர்க்குயிர்ம ணாள ரேதனி
யவன்ற னக்குமொரு தோழ ரேயட
ரலங்கு வச்ரபதி யாள ரேயரு ளமரேசே

விரும்பி யுற்றகலி மாவொ டாவியு
நடந்து செத்தபிற காரு மேளையை
விரைந்த டக்கியகல் காலை தீநர கழலாதே

விடங்கொ ளித்தரவு தேனு ருதுட
னெரிந்தி டக்கபுற தாபு ருதெழில்
விளங்கு சொற்கமண வாடை வீசருள் புரிவீரே

வருங்க விப்புலவ னடி யேவுமை
யிறங்கி மிக்கறவு லாவின் வாயிலின்
வணங்கி நிற்பவவ னேறு வாகன முயிர்மாய

வருந்தி மெத்தவுழல் வேலை மீளவு
மிறந்த வொட்டைகையி னேறி யூர்புக
வரங்கொ டுக்குமதி னுவில் வாழ்கபி  யிறகுலே.

தனதன தனதன தத்த தானன
தனதன தனதன தத்த தானன
தனதன தனதன தத்த தானன—தனதான

வரியளி யுதறிமு டித்த வார்குழல்
கலையொடு சிலையைம ருட்டு வாளுதன்
மதரரி சிதறிய டர்த்த வேல்விழி  குயில்யாழ்போல்

மதுரவி னமுதுப ழுத்த தேமொழி
பிறைவட மிடறும ருப்பு நாண்முலை
மரகத மயில்வடி வொத்த சாயலின்  விலைமாதர்

விரிகதிர் நிலவிய வச்ர மேடையி
னறுமல ரமளிப டுத்த பாயலின்
மிடறெழு மிசைகள்ப டித்த மோடியி  லவர்மேனி

மிர்கமத களபம ணக்கும் வாடையி
னரசிலை தெரியவு டுக்கு மாடையின்
மிகவும யல்கொளுப வத்தன் மேவுத  லொழியேனோ

விரவிய பெரியவி ருக்க நீழலி
னறிதுயி லவரர்வ ருக்க னுதப
முலவுவெண் மதிவத னத்தி னூடுறை  வரலாலே

வுறுசின குறுகிமு கத்து வீழ்வெயில்
மறைபட முடவுட டத்தி னலர
வுயர்குடை யிடமுன்வி தித்த காரண  முடையோரே

யிரசத மலையத கட்டு வால்கொடு
மதகிடை யுழறிய டித்து நாரைக
ளிரதர மடுவையு ழக்கி வாளைகள்  குதிபாயும்



யினவளை தவழுவ யற்கண் மேவிய
வகழியு மதிழும ணிப்பொன் மாடமு
மிலகிய மதினந கர்க்குள் வாழ்கபி  யிறகுலே.

தந்ததன தத்தத்த தத்தனந் தானதன
தந்ததன தத்தத்த தத்தனந் தானதன
தந்ததன தத்தத்த தத்தனந் தானதன—தனதான

தண்டுகையெ டுத்துப்பு டைக்கவும் பாரதலை
மண்டையுடை பட்டுத்தெ றிக்கவும் பாவியவர்
தங்களைநெ ருப்பிட்டெ ரிக்கவுந் தேளரவு  சதகோடி

தந்தமத மூத்திக்க டிக்கவுந் தேவர்தமை
கொண்டிருப தத்தைப்பி ணிக்கவுந் தீயவுடல்
சங்கிலிக ரத்திற்பி ணிக்கவுங் காபருடல்  கரியாக

மண்டுதழல் சுட்டுப்ப றத்தவும் தீயனரி
கண்டமிசை வைத்துக்க டிக்கவுந் தூளியெழ
வன்றிரிகை யிட்டுத்தி ரிக்கவுந் தாலமுழு  மடலூடே

வன்பிடரி தொட்டிப்ப றிக்கவும் பேதமுறு
தெண்டனையி தற்குட்பொ றுக்கவந் தோகொடிது
வண்கணர கத்தைக்க டத்திநுஞ் சேவடியை
யருள்வீரே

கொண்டலைய லைத்துக்கு லைத்துநுண கார்மணலை
வென்றலைபு ரட்டிப்பு குத்திடுங் காவலைய
கொந்தளக முத்துக்கொ டிக்கரும் பானவுமு  கபிபான

கொஞ்சுகிளி யைக்கைப்பி டித்தருந் தீனெறியின்
மன்றலைமு டித்துத்தி னைத்தலங் காரமொடு
கொங்கரென வைப்பிறகு கித்திடுங் காமனல
னுடையோரே

செண்டுளவு நெட்டொட் டகைக்குவந் தேறுமுது
கிங்குமையெ டுத்துச்சு மக்கவும் பேறுடைய
செம்பனுல கத்திற்ற ரிக்கவுஞ் சாபவர மிடுவோரே

செண்பகவ யற்கட்ட டத்திளஞ் சோலைமணி
மண்டபமு கப்பிற்பு துக்குமொண் சாலையிடை
தென்றறவழ் மக்கப்ப திக்குள்வந் தாழுநபி யிறசூலே.

தய்யான தந்ததன தான தானன
தய்யான தந்ததன தான தானன
தய்யான தந்ததன தான தானன—தனதான

எய்யோடெ ழுந்தகரு மேக மோகநறு
நெய்யோட ளைந்தகுழ லூச லோகுழை
வைவாளி லங்குமயில் வேலி னேடிகல் விழிமாதர்

வல்லோதி ரண்டெழு கோர மோசிமிழ்
வில்லார முங்குதன பார மோநெறி
வல்லார்ம யங்குமதி நாணு நாடொறு மயலான

வுய்யாத சிந்தைதனில் வீழ மாதவஞ்
செய்யாத வம்பனிவ னுகு மேயென
வுள்ளாவி நொந்துருக வேசி யேசொல மெலிவேனே

வொய்யார வுங்களிரு பாத மாமலர்
கையார வெந்தன்விழி கூர வேகன
வுல்லாச மும்பெறம னுமி லேயுற வரவேணும்

மெய்யான வுங்கள்கலி மாவை நாவதி
லுய்யாத வண்டர்பெரி யோரு மேவரும்
வின்ளாதி கழ்ந்துசொலின் மாய நாரக முழல்வாரே

வெய்யோனு மங்குன்மினிர் சோமன் வானவ
ரெல்லாமி றங்கியும தேவ லேசெயு
மெய்யாறு வன்பிணிக டீர நாவற வருவோரே



செய்யூடொ சிந்தமுதிர் சாலி வேலிக
ளுய்யான மெங்கும்வளர் தாழை வாழைக
டெள்ளார முஞ்சிதறு பூக நாகின விரிபாளை

செல்லோடி வந்துலவு மேடை யோடைகள்
வெள்வால வண்டுதுயில் காவி வாவிகள்
செவ்வாயு றைந்தமதி னவின் மேவிய விறசூலே.

தனதந்த தனதந்த தனதந்த தனதந்த
தனதந்த தனதந்த—தனதான

இருகெண்டை யொருதொண்டை யிருகஞ்ச மொருசங்க
மிருசந்தி யொருதிங்க ளதிமோக

வெழிறந்த தரளங்க ளணிதங்க ளணிதங்க வடமுங்கி
யிறுகுந்த ணரவிந்த மழகான

தருபந்து சிறுகும்ப மொளிர்குந்த முயர்குன்று
தனைவென்று வருகொங்கை மதயானை

தரவந்த பொதுமங்கை புரிவஞ்ச மயலென்ற
தனைபொன்றி விடவின்று வரவேணும்

பொருகின்ற படையம்பு சிலைதண்ட மொடுசண்டை
பொரவந்த கொலைவண்ட ரொருகோடி

புனையும்பொன் முடிநின்று வுருள்வென்று கொடுபொங்கி
புகழ்செம்பொன் மலைசென்று ளெதிர்சீறி

வருசிங்க மெனவந்து பெயரெங்கு முறுநம்பி
னலனன்பு மிகுசெங்க ணுடையோரே

வளர்மங்கு லொளிதங்கி யெழுமிந்து நிகர்கொண்ட
வதனங்கண் மணியெங்க ளிறசூலே.

தனனா தனனா தத்ததந்த தானன
தனனா தனனா தத்ததந்த தானன
தனனா தனனா தத்ததந்த தானன—தனதான

அடுபால் கனிதேன் விட்டளைந்த மாமொழி
விலைமா மகளார் பச்சைமஞ்சள் வாடையி
னதிலே மனமே தட்டழிந்து நாடொறு மயலாகி

கொடியே னவமே கெட்டுநொந்த பாதக
னடியே னுமையே முற்றுநம்பி னேன்மிகு
குறைபோ யுயவே சற்றிரங்கி யாழ்வது கடனாமே

சுடுபாலை யினீ ரற்பமின்றி மானிடர்
தடுமா றியபோ தத்தமஞ்சு நீள்விரல்
சுழியா றுகவே தத்தமுண்டு தேறிட வருள்வோரே

மடுவாளைகள்போய் முட்டவன்று பூகத
மடல்வாய் விரிநீள் கொத்தலர்ந்த பாளைகள்
வளர்மா மதினுமக்க மென்றும் வாழ்வுடை யிறகுலே.

தத்தாத்தத் தாத்தத் தாத்தத் தாத்தத் தனதன
தத்தாத்தத் தாத்தத் தாத்தத் தாத்தத் தனதன
தத்தாத்தத் தாத்தத் தாத்தத் தாத்தத் தனதன
—தனதான

கற்றோர்க்குட் பேச்சிட் டேய்த்துத் தோற்றுத் திரிபவ
ரைப்போற்பற் றேர்க்குற் றோற்று தீட்புக் குலகிரி
தற்றாக்கட் பாக்கட் டாக்ஷதீக்ஷ தீக்ஷனமுனி
யதுபோத

தக்காழ்றக் கோற்ற பாட்டுக் கேட்டுச் சிறியனை
கட்பார்க்குட் சேற்றிற் கோத்துச் சீட்டுட் படவருள்
தக்காச்சிக் காச்சிக் காழ்பட் டேறற் றிணையுன
தருள்பாராய்



பற்றோர்க்குட் போயப்பற் றாய்க்குட் கெட்டோர்க்
குத்திருவக
லக்காற்றைக் காட்டிக் காற்றைத் தாட்டிக் கையனற்றரு
மற்றாற்றத் தோற்றக் கீற்றிச் சீட்டைச் சரணருள்புவிமீதே

யுற்றாற்றத் வாக்கை சேர்க்கைப் பூற்றிற் பொருளரு
விற்றாக்கத் தாக்கத் தாய்ப்பெற் றார்க்கக் கரிதெனக்
குட்போட்டுப் பார்க்கப் பார்ப்பிட் டேர்க்கப் புவிமக
ளிறகுலே.

தந்தன தானன தத்தா தந்தன தானன தத்தா
தந்தன தானன தத்தா—தனதான

கொந்தழ வோதிவ கைக்கே யிந்திர சாபநு தற்கே
கொண்பயி லீலவி ழிக்கே குயில்போலே

கொஞ்சிய ராகமொ ழிக்கே செங்கனி வாயினி தழ்க்கே
கொங்கவிழ் தாதின கைக்கே யழகான

மந்தர பாரமு லைக்கே யிந்திர ஜாலவி டைக்கே
மண்டுத டாகந டைக்கே பிடியான

மங்குல்கொள் யானைந டைக்கே சந்திர காவியு டைக்கே
மங்கையர் பால்மனம் வைத்தே யுழல்வேனோ

சிந்துர யானைமு டித்தேர் கந்துக யூகப டைப்போர்
சிந்திட வோர்கம ணற்றா வியகோவே

சிங்கப தாகைபி டித்தே வெண்குடை நீழல்க வித்தே
தெண்டிரை ஞால மளித்தே வருகோவே

சந்திர சூரிய னற்சே னும்பரி னைவர்த மைச்சீர்
தண்டவி னேவல்ப ணித்தாள் பெரியோரே

சந்தன வாடையு கக்கூர் தென்றலு லாவும டுச்சூழ்
தண்டலை சேர்மதி ளத்தா ரிறகுலே.

தனதன தனதன தான தந்தன
தனதன தனதன தான தந்தன
தனதன தனதன தான தந்தன—தனதான

நறுமல ரணியொடு சூடி யந்தன
மிர்கமத களபம ளாவி மண்டிய
நறைதட வியகுழ லான கொண்டலு    மணைமானும்

நடைபிடி யிடைகொடி மாதர் தங்குய
நழறிகழ் தறுவிழி கோடி ரண்டையு
நளினிந ளினநறை வாரு வண்டுக    ளிசைபாடுங்

கெறுவவ சடதட சூளி யின்பொழி
திறிகட முமிழ்மத யானை திண்படு
கிழைவரை நிகர்புய மீது கொண்டுயிர்    குறையாதே

கிர்பையொடு விகசித பாத பங்கய
மலரடி பிறமொழி வீசி நண்பர
கெதிபெற சுவனநன் னுடு தந்தருள்    புரிவீரே

கறைமடை விடுமென வோடி முங்கிய
ரணகள முகமதி லாடி டும்பல
கசரத துரகப தாதி வெண்டிரை    யலைமீதே

கனமுரு டுடுடுடு டுடு டுண்டுடு
செகதிண செகதிண சேகு செந்தரி
கககக ககவெமு பேரி துந்துமி    தவில்தாள

மறைபடு முரசுக ளூதி யின்பல
குணர்வரு மபுஜகல சீவ னைந்திட
வவனுடல் றசைநரி நாய ருந்திட    வொருகோடி

யலைகைகொ டிகழுகு சேண முண்டிட
வமர்பொரு மதகரி போலு மொண்டிறி
லரியென வருநபி மார்க டம்பதி    யிறசூலே.



தாந்த தனதன தாந்த தனதன
தாந்த தனதன தாந்த தனதன
தான தனதந் தான தனன
தான தனதந் தான தனன
தனதன தனதன தனதன தனதன—தனதான

காம்பொ டுசலிடு மோம்ப ரிலகிய
காந்தி தருமிருள் கூந்தல் முகில்சமை
காற ருடன்சிங் கார ருடனே
காவி னெவியுங் கோல மிகல
கரவனை கலகலெ னநடமி டுபவனி    யரமாதர்

பாம்பி னுடபட வேண்டி மயல்கொடு
பாய்ந்து வடிதனில் வீழ்ந்து மனமெழு
பார முலைநெஞ் சார கனிவாய்
பாகி னமுதுண் டாக மகிழப்
பரவச மூடனனு தினமிது தொழிலென    வுழல்வேனோ

தேம்பல் கனிசொரி பூம்பொ ழிலழகு
சேந்த மதினமின் வேந்தர் நலனெடு
சேர வருள்கண் பாரு மினிய
தீரு மறிவுந் தாரு மொழித
சிரசறு சடிபடி முடிதொட திடமுடன்    வருவோரே

யாம்ப லணிதறை பாம்ப ரியலவே
தாம்ப ரருள்பய காம்ப ரியன்மறை
யாலபி கொந்தா லநயினு ராசில் மரபில் காசிமெனையும்
மருளக மகிழுகு மதுமுகம் மதுநபி    யிறசூலே.

தனனதன தான தான தான
தனனதன தான தான தான
தனனதன தான தான தான—தனதான

அறபுவள நாடு கோடி கோடி
புடைகொணகர் காகி றூரில் வாழு
மதிபதிச லாகு தினு தார    மகவானோர்

அலகில்பதி ஞலு ஞான வாரி
நுகருமிபு ரூகி மான மேக
மருள்செயினு லாபி தீன ஞேர்நல் கியஆலிம்

மறையின்வல காஸி நூ று தீன்மொய்
குலதிலக ஞன பேரன் யானு
மரபினுமர் பேர்கொள் காசி மாசில் புகழ்பாடு

மதுரகவி ராஜ ஞக லாலெ
னிருமரபு ளோர்செய் பாவநூறி
மரகதவி மான வீடு சேர வருள்வாயே

யிறுதியிடை யாதி யாவ ராலு
மளவிடவொ ணுத வேக ஞய
னிசையுமொலி யாய்வி ஞேர்கள் ஷாகி தெனவோதி

யிறைய றுசி லேக லால்பெ ஞக
செயினபெனு மாதை யாதி காவி
னெழுதியொகி யேவ வீடு கூடு மகுமூதே

முறுசல்நபி மார்க ளார்வ மோடு
பரவரிய ஞான பாகை தேரு
முகிறவமு மேடை மாட கூட மதிஞவில்

மூதலபுது லாகு மார தீர
வுபையமெழு ஞால வால சூர்ய
முகம்மதுற்ற சூலுல் லாவற் றகீ மிறசூலே.

முற்றும்.

# காஸிம் புலவர் ஒலிநாயகம் (ரலி)

அவர்களின்

# இன்னிசை

பெருமானார் முஹம்மது முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்கள் பெயரில் தாங்கள் பாடியிருந்த திருப்புகழை விளக்கம் செய்ய வென காஸிம் புலவர் அப்பா அவர்கள் பூவாறு என்னும் பதிக்கு அழைக்கப் பட்டிருந்தார்கள். அதுகாலை அவர்களின் காலில் புண்ணொன்று வந்துவிட்டது. அதுதந்த பெருந்தொல்லையால் வேதனை மிகப்பட்ட புலவர் அவர்கள், அந்நிலையில் திருப்புகழ் விளக்கம் செய்ய மறுத்து புண் ஆறவேண்டி புண்ணியர் நபி (ஸல்)அவர்கள் மீது இன்னிசை பாடத் துவங்கினார்கள். அமுது புலம்பி அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது இன்னிசையைப் பாடி முடித்த அப்பா அவர்களின் காற்புண் கடிதில் குணமேற்பட்டு அதன் பின்னரே திருப்புகழைப் படித்ததாக வரலாற்று நிகழ்ச்சி யொன்றுண்டு.

பிஸ்மில்லாஹி

# இன்னிசை

காப்பு

முன்னவனே அஹதியத்தாய் முத்தியுஹ தத்தாகிப்
பின்னவனே வாஹிதிய்யாப் பேரான மெய்ப்பொருளே
தன்னவனே தயாபரனே சராசரமாய் நின்றவனே
மன்னவனே யின்னிசைக்கு வல்லவநீ காப்பாமே.

நூல்

ஆதியொளி வாகியகி ரண்டபகி ரண்டமொரு
சோதியொளி வாகிநின்ற தூண்டா மணிவிளக்கே
யோதியுணர் ஞானகலை யோலமிடும் செய்யிநப்துல்
காதிறேநல் ஹாஷீம்குல காசிமுஸ்த பாநபியே.

மெய்யெடுத்த நாண்முதலாய் மெய்யறியேன்
வெட்டவெறும்
பொய்யெடுத்த பாவியை நும் பொன்னடிக்காட்
கொள்வீரே
மையெடுத்த சோலைமழை மாரிவெள்ளந் தூவதுஆக்
கையெடுத்து வேண்டுமக்கா காசிமுஸ்தா பாநபியே.

பொய்மாற வென்னொருகாற் பொங்குபசும் புண்ணழற்ற
மைமாற வேயருட்கண் வைத்திடுநா ளெந்நாளோ
பெய்மாரி நோக்கியிந்தப் பேருலகம் வேறுமொரு
கைமாறு செய்வதுண்டோ காசிமுஸ்த பாநபியே.

பூக்குந் தடநிழலும் பூவாது பூவின்முகில்
ஆக்குங் குடையுமன்பி யாக்களுக்கு முண்டாமோ
போக்குங் கொடுந்துயரம் பொறுக்கும் பொறையபயங்
காக்குங்கரு ணேசர்மக்கா காசிமுஸ்த பாநபியே.

ஒருகால மும்மணுகா வொருகால் பிணியகல
வருகால மெக்காலம் வருகா லறியேனே
குருகாலுஞ் செங்கையொரு கோதைதசை யூட்டிவைத்த
கருகால மூண்டவெங்கள் காசிமுஸ்த பாநபியே.

சங்கை படைத்தவொரு தாய்கண்மகன் ரூணிழந்த
வங்கை படைத்ததிற மார்க்குஞ்செய வுண்டாமோ
கொங்கை படைத்தவஞ்சிக் கொப்போடுந் தாருவரக்
கங்கை படைத்தவெங்கள் காசிமுஸ்த பாநபியே.

கோலூற்ற மன்னரிட்ட கோட்டைபதி னன்குமொன்னூர்
வேலூற்ற மானசமர் வென்றுதங்கைக் கொண்டோரே
பாலூற்று நீலாற்றுப் பள்ளவெள்ளம் வெள்ளியணைக்
காலூற்று மக்கநகர் காசிமுஸ்த பாநபியே.

வென்றேறும் வேலரசர் விரமுடி யாசனத்திற்
சென்றேறுங் கஞ்சமலர்ச் சேவடிதந் தாளுமையா
நன்றேறு முத்திதரு ஞானக்கொழுந் தேதுளசிக்
கன்றேதண் சோலைமக்கா காசிமுஸ்த பாநபியே.

ஐதூக்குங் கையினகன் ரூள்வேட்டை யாடுமழை
மைதூக்கும் போதரிக்கண் மாதருக்கா ளாவேனே
பைதூக்கும் பாந்தளுணப் பாழ்நரகம் புக்காமற்
கைதூக்கிக் கொள்ளுமக்கா காசிமுஸ்த பாநபியே.

வேட்டுங் கனவிலொரு வேளைவெளி யாகிவந்து
நாட்டும் பரகதியு நல்கிடுநா ளெந்நாளோ
தீட்டும்புக ழாபரணற் றீன்தீன் முகம்மதெனக்
காட்டுங்கதி கோட்டுமக்கா காசிமுஸ்த பாநபியே.

விண்பார்க்குஞ் சாதகம்போல் வேண்டியுமை மீண்டுமிசை
பண்பார்க்குஞ் சேணகணப் பட்சியென வுந்தேடி
யெண்பார்சகு மேழைதனக் கேயிரங்கி யெவ்வளவுங்
கண்பார்த் தருளுமக்கா காசிமுஸ்த பாநபியே.

பூரியகோ யென்னெருகால் புண்ணிருந்து நொந்தழற்ற
வீரியமே பொன்றியுள்ளம் வின்னா தயர்வேனே
பேரியபேர் கொண்டவுங்கள் பேருடையோ னுக்குவரக்
காரியமேன் ஹாஷிம்குலக் காசிமுஸ்த பாநபியே.



முள்ளாறுங் கல்லாறு மூழ்கிப் பரந்தவெள்ளத்
துள்ளாறு மான்காட்ட வுந்துகரை கண்டோரே
புள்ளாறு காலுழப்பப் பூஞ்சோலை பூவிரிந்து
கள்ளாறு பாயுமக்கா காசிமுஸ்த பாநபியே.

பால்சாய்க்கும் வெள்ளைவட்டப் பாரரசர் வீரமுரண்
வேல்சாய்க்கும் வெற்றிகொண்ட வேதாந்தத்
துப்பொருளே
சேல்சாய்க்கு முட்புறக்காய் செவ்வாழைக் குலைவரம்பிற்
கால்சாய்க்கு மக்கநகர் காசிமுஸ்த பாநபியே.

பாணியாத் தண்ணளிக்கண் பார்த்தெவ் வுயிர்க்கும்புக
லாணியாய்த் தன்னுயிர்போ லாளுங் கருணேசே
யேணியாய்க்கடந்தறுஷிலேகனைக்கண் டெட்டுசொர்க்கங்
காணியாய்க் கொண்டவெங்கள் காசிமுஸ்த பாநபியே.

நத்தூரி யகுளத்தி ரைமின்றி நாட்டியவம்
புத்தூரி னின்றுவெள்ளம் பொங்கிவரத் தானழைத்தீர்
மூத்தூரி யகுடையின் மூவுலகுங் காக்குமெய்யிற்
கத்தூரி வாடைகமழ் காசிமுஸ்த பாநபியே.

வேலேறு முட்குடைவேல் வெய்யசிலை வேடனுக்காய்
மாலேறி நின்றுசலாம் வந்துசொல விண்டோரே
கோலேறி ரூலழிதேன் குண்டூர்ந்து வந்துகொடிக்
காலேறு மக்கநகர் காசிமுஸ்த பாநபியே.

மட்டுரைம் பாலளக மாணிக்கப்பொற் கொப்பையெட்டித்
தொட்டூர் கருங்கயற்கட் டோகையா ளாவேனே
வெட்டு ரடுங்களப்போர் வேன்றதற்பின் மூன்றுபகல்
கட்டுரமர்ந் துவருங் காசிமுஸ்த பாநபியே.

சேர்ந்தமட்டும் வாய்ந்தபதந் தெப்பந்தொட்டேன்
பாவவெள்ள
நீந்தமட்டும் போந்துசற்றே நின்றுகரை யேற்றுமையா
சாந்தமட்டுங் கஸ்தூரிச் சாலமண மேவுமெண்டி
காந்தமட்டும் வீசப்புய காசிமுஸ்த பாநபியே.

வெற்பூரு மற்புயமும் வெண்ணகையும் முத்திரையும்
பொற்பூர் முகாம்புயமும் பொன்னடியுங் காணேனோ
அற்பூரு மின்சொன்மறை யாரமிர்தற் செவ்வாயிற்
கற்பூர வாடைகமழ் காசிமுஸ்த பாநபியே.

போரூருஞ் செவ்வேற்கண் பொருதுமட வார்நிதம்பத்
தேரூருங் கோட்டாறுந் தேடி மெலிவேனோ
நீரூரும் பாரூரு நின்றாருஞ் சீருடைய
காரூருஞ் செங்கையெங்கள் காசிமுஸ்த பாநபியே.

ஊசிமே னாட்கணைந்தாங் குளதாயி ஷாமனையிற்
றாசிமே னும்மொளிவாற் றான்கவர நின்றோரே
வீசிமேற் கொழுந்தோடி விண்பூத் தலர்ந்தபுகழ்
காசிமே ஹாஷிம்குலக் காசிமுஸ்த பாநபியே.

விண்ணின்மணி யேபொருளே வெண்மணியே ரத்தினமே
எண்ணின்மணி யேகுருவே யெவ்வுயிர்க்குந் தாயகமே
மண்ணின்மணி யேதருவே வாய்ந்தவுல கேழும்புகழ்
கண்ணின்மணி யேநிதியே காசிமுஸ்த பாநபியே.

கோடுபடுஞ் செம்பவளக் கொம்பனார் கண்வலைப்பட்
டூடுபடு பாவியையீ டேற்றுவது மெந்நாளோ
பீடுபடுந் தேறற் பெறுக்கா றுவட்டுஞ்செந்நெற்
காடுபடு மக்கநகர் காசிமுஸ்த பாநபியே.

பூவா ரணமுகத்தே புக்கியிறந் தாலுமுயிர்
தாவா ரணமுகத்திற் சஞ்சரிக்கக் கூடாதே
பாவா ரணமுகைக்கும் பைம்பொனகர் கற்பகப்பூங்
காவா ரணமுகைக்கும் காசிமுஸ்த பாநபியே.

மாகபடா மிட்டவிழி மாயவலைப் பட்டுழன்று
பூகபடா மிட்டதனப் பூவையர்க்கா ளாவேனோ
வேகபடா மிட்டமுக வேழமன்னர் மானவெட்டிக்
காகபடா துட்டவைவேற் காசிமுஸ்த பாநபியே.

பாம்போதி யன்றுமது பாதாம் புயம்பணிந்து
வீம்போதி வந்துசலாம் விண்டுசொல நின்றோரே
பூம்போதி லஞ்சிறைப்பூம் புள்ளியுடைப் புள்ளினங்கள்
காம்போதி பாடுமக்கா காசிமுஸ்த பாநபியே.



சேல்பிடித்த புண்டூர்ந்து தெரித்திரகோ யுந்தீர்ந்து
மால்பிடித்த சஞ்சலமு மற்றுமொ ழியேனோ
பால்பிடித்த சிந்தைப ராக்கோப ரமடையக்
கால்பிடித்தேன் கண்ணில்வைத்தேன் காசிமுஸ்த
பாநபியே.

நீயிரங்நா ளொளிவாய் நித்திலமாய் மாமயிலாய்
மாயிருளா லத்தீற்றின் வந்தநபி நீரலவோ
பாயிரநா மத்தோங்கும் பரனுமத் தொன்றொழிய
ஆயிரநா மத்துடையீர் ஆலநபி யுல்லாவே.

நீலவட்ட வானீந்தி நிலவுவட்ட மொன்றுவரத்
தாலவட்ட மீதில்ரண்டு சந்த்ரவட்ட மாகிவிட்டீர்
காலவட்ட மோங்குமுச்சிக் கதிரோற்குத் தான்குதவி
ஆலவட்டம் வீசுமக்கத் தாலநபி யுல்லாவே.

துக்கரண பாதகங்க டுண்டுகலி தீண்டாமற்
சக்கரவா ளந்தாண்ட சாபித்தெனை யாண்டுகொள்வீர்
செக்கரன கேசசெல்வ சித்திமுத்தி நல்குமுவெட்
டக்கரந் தந்தாளுமக்கத் தாலநபி யுல்லாவே.

போற்றுவரார் ராத்மாவைப் பொறுப்பவரார்செய்தகுற்றந்
தேற்றுவரார் மனப்பீடை தெரித்திரநோய் பாவமற
மாற்றுவரார் வல்லோன்முன் மன்றாடிச் சொர்க்கபதி
ஆற்றுவரா ரும்மையல்லால் ஆலநபி யுல்லாவே.

பாதவனந் தாவனந்துப் பாரிசல்மான் பாரிசுக்காய்ச்
சீதவனந் தான்சிதறச் சீமூதம்பெய் வித்தோரே
மாதவனந் தந்தகஃ பாவைவலங் கொண்டுதிங்கள்
ஆதவனந் தோடுமக்கத் தாலநபி யுல்லாவே.

கூனிறால் பாய்ந்துவெளிக் குண்டமுக டுருவித
தேனிறால் கீறிவழி தேனாறு வட்டொழுகிக்
கானிறா றுறவனருங் கன்னியிள வாழைநிழல்
ஆனிறா றுஞ்சுமக்கத் தாலநபி யுல்லாவே.

கூம்பூடு பாய்விரித்துக் கூன்பிறைய வங்கமுந்நீர்
தாம்பூடு பாய்ந்துலவத் தான்பொருப்பிற் றந்தோரே
வீம்பூடு போனவுயிர் மீட்டமிர்த சஞ்சீவி
யாம்பூடு போன்றமக்கத் தாலநபி யுல்லாவே.

மூசா ணைபத்துல்மகு மூறிற்சொற்ற சொற்சேரக்
கோசால மாய்நிறுத்திக் கொண்டிறைமுன் சென்றோரே
வாசாம கோசரமாய் வந்தகுறு ஆன்வழிதீன்
ஆசார மாய்நடத்தும் ஆலநபி யுல்லாவே.

பாசனல னேதும் படைத்திலே னுடையபவ
மோசமா கும்படிக்கே மோட்சந்தர வேண்டுமையா
மாசனமா ரும்புகழ வல்லோ னறுஷினிற்சிங்
காசனமே லேறுமக்கத் தாலநபி யுல்லாவே.

தாறலையில் வீசியபூந் தண்டலையி னூடுடும்பு
வேறலையி லாமலுமை வேண்டிவச னித்ததனுற்
பேறலைவி லாதவொரு பேரின்பக் கலிமாவை
ஆறலையில் வேடற்கரு ளாலநபி யுல்லாவே.

காட்சிவெண்பா—பின்முடுகு

கண்டேன் கலியாரக் கலிகடந்தேன் கைனிலையாய்க்
கொண்டேன் சுவர்க்கபலன் கொண்டேனே பண்டு
வடிவமைத்த நிலவுபச்சை மரகதப்பொன் மயில்வனத்தர்
தடவரைக்கண் டதிபதித்த தாள்.

முற்றிற்று

காயற்பட்டணம் வித்வசிரோமணி

ஷெய்கப்துல் காதிறு நயினார் லெப்பை

ஆலிம் புலவர் நாயகமவர்களின்

# நாகையந்தாதி

பிஸ்மில்லாஹி

# நாகையந்தாதி

## காப்பு

மணியொளி போலுமலர் மணம்போலு மருவியுயிர்க்
கனியொளி போன்றவுண்மைப் பொருளே யகமுஞ்சுகமுங்
கனியொளிர் மேதையுந்தந் தருள்வாய்அப் துல்காதிர்புகழ்ப்
பணியொளி யாநிதிநாகை யந்தாதி படிப்பவர்க்கே.

## நூல்

முதனபிக்குரிய முறையொடு புணர்த்தி
நுதலியபொருளை நுவன்றுகேட்டது

மாதவக் காரண வாரணத் தார்மகு மூதளித்த
மாதவர்க் காருயி ராருயர் தோன்றன் மரபுடையீர்
மாதவக் காக்கைய னேய்க்கறை போக்குக வண்சிறகின்
மாதவக் கான்மலர்த் தேன்றட நாகை மகீபதியே.

ஒருநானெறிக்கு முரியமுறை யுணர்த்துங்
குருவேயென்றென் குறையிரந் துயர்த்தது

பதியே மநனி மருநபி மாதுலர் பண்பரிவுட்
பதியே மநனி மருகரிந் நால்வர் பகர்நெறிதீப்
பதியே மநனி மருவாதி யார்க்கும் பயிற்றுமுயர்
பதியே மனநி மிரும்பொரு ளைகைப் பதிக்கரசே.

தற்பதிகுறித்துத் தகைமையுங்குறித்துப்
பொற்பதமாட்சிப் பொருளைவியந்தது.

பதிக்குமணி முடிமீதே சிறக்கும் பருமணிப்பேர்
பதிக்குமணி முடியாதன வில்லைநும் பாதமலர்ப்
பதிக்குமணி முடியாளருக் கேபடர் பாயிருட்சீப்
பதிக்குமணி முடிநாற்றெங் குநாகையம் பார்த்திவரே.

அண்ணலதுகருணை யம்பகநோக்க
மெண்ணியபொருளொடு மியலுமென்றது.

பார்த்திட்ட மாயையொழிந் தோரொடு பஃறிக்கிணைக்கற்
பார்த்திட்ட மாகடந்திவித் தோய்பல காவிறையைப்



பார்த்திட்ட மாதவநா கைமன்ன விந்தப்பாவிமுகம்
பார்த்திட்ட மாகப்புரப் பீரிதுசவு பாக்கியமே.

பெருந்தகைநாகைப் பிரபந்தியர்நண்பா
அருந்துயர்களையு மருடருகென்றது.

பாக்கலையாவு முணர்ந்தோய் கமுகின் பழக்குலையின்
பாக்கலையா மூத்துதிர் பொழினைகைப் பதிவளரன்
பாக்கலையா மதியேகுரு வேபிரபந் தியர்நண்
பாக்கலையா வருளீகவென் னேய்த்துயர் பற்றறவே.

நயம்பெறமுன்னர் நவந்தருந்தம்பலம்
பயம்பெறவின்னும் பகுத்திரென்றது.

பற்றும்பலரு மிருந்தாவ தென்னைப்பகைப் பிணியால்
பற்றும்பலம் புந்துரவாயவுன் னம்பயன் பெறநும்
பற்றும்பல மின்னுந்தந் தருள்வீர்பது மத்துறைதேன்
பற்றும்பலங் கமழ்நீரோடை நாகைப்பதிக் கிறையே.

உயிரினைக்காக்கு மொள்ளியகிருபையென்
றுயரினுக்கமிர்தந் துய்ப்பியென்றது.

இறைக்குங் குலிகவிரற் பதுமக்கை யிளம்பிடிதான்
இறைக்கு முயிர்க்கும் பொருந்தியம் மண்ணையை
யீடழித்தீர்
இறைக்கு நபிக்கு மறைக்கு மினியவவென் பிணிக்கும்
இறைக்குங் கிருபையளித் திநன்னைகை யிராசதரே.

மறைபடுபொருளை வெளிப்படுத் தண்ணல்பாற்
குறைபடுத்துள்ளங் கூம்பலென்னென்றது.

இராசித்தரும் பொருள்வல் லவன்பாற் பெற்றவெம்
மிறைசொல்
இராசித்தரும் பொருள்போ னின்றவா கிஸ்தியேந் தியந்த
இராசித்தரும் பதம்போற்றச் செய்திர் பையலித் துயரால்
இராசித்தரும் புவதோவுள நாகையி ருப்பவரே.

விருப்பதும்புகழ் வியந்தெழுகடற்கப்பா
லிருப்பினுமாணை யெனிதல்லவென்றது.

இருப்புக்கட லகநாகைமன் னனும்மிசை யெனினும்
இருப்புக்கட லையென்னமெழு கேனுமின்பம் பெறுங்காண்
இருப்புக்கடற் சுதைசெய்தேன் நன்னீரிக்குச் சாறெடுத
இருப்புக்கட விடமேனு நும்மாணை யெளிதல்லவே.

அணிமுகக்காட்சி யருளுகவென்றது.

அல்லலரிந்தழ கேங்கமலர் நும்மடி யவன்மெய்
அல்லலரிந்த திருமுகக்காட்சி யருளி ரைம்பால்
அல்லலரிந்த மடவார் மயக்கம் கற்றுளமெய்
அலலலரிந்தன மேந்திய நாகை யருந்தவமே.

பிணிதுயரொழிக பெருமனமென்றது.

அருந்தவ ருந்தத் தெவுட்டாவ முதமறிவுளரும்
அருந்தவ ருந்ததை சிந்தாமணி யளவின்றியகை
அருந்தவ ருந்தருநன்மனமே யொழியா குலமெய்
அருந்தவ ருந்தவிலாதுயர் நாகையகப் பொருளே.

வன்புடைநஞ்சம் வைத்தவற்காக்கினை
துன்பக்காப்பினைத் தொலைத்திடுகென்றது.

அகத்தடைபட் டுலகாசையிற் பெற்றவருந் துயரின்
அகத்தடைபட் டுழல்வேனுக் கிரங்கியருளிர் மன்னன்
அகத்தடைபட் டநஞ்சிட்டவற் காக்கினையா லணிசொல்
அகத்தடைபட் டதுயர்கீர்த்தி நாகையரிக் குன்றமே.

நீடியநாகையி னிறையின்றகையுட
லாடியதானந்த மல்லவோ வென்றது.

அரிக்குமரிக் குழலாலுல கேழுமமை யுமிருள்
அரிக்குமரிக் குலங்காட்டிய மேன்மைய றிவரெவர்
அரிக்குமரிக் குமரிக்குழுய ரொளியங்க மன்றோ
அரிக்குமரிக் குண நாகையி லாடியதா னந்தமே.

இரக்கம்வைப்பிரென் றெதிர்குறையிரந்தது.

ஆநந்தமா றுபட்டார் மூனங்கோற் கொண்டடித்தெழுப்பி
ஆநந்தமாட் டிலனித்தீர் விண்போலு மலர்ந்த பண்ணை
ஆநந்தமா மணியாற்றி ருநாகையரச வைத்திர்
ஆநந்தமா தவமேயடி யேன்பிணி யாசறவே.

வரத்தோர்க்கென்சொல் வறியதென்றிரங்கல்.

ஆசினிமைத் தமினெத்த விவ்வாழ்வென் றறிந்தகற்றி
ஆசினிமைத் தவம்பூண்ட தன்றேமன மாம்பிரநல்
ஆசினிமைத் தண்டலைத்திரு நாகையர்க்காய தென்சொல்
ஆசினிமைத் தடங்கண்ணியர்க் காட்படற் கையமின்றே.



ஓகையினடங்கி யோருர்விடுத்திந்
நாகையிலுதய நயந்தனரென்றது.

ஐயம்படுங்கசங் குன்மம்பன் மூலமகற்றி மெய்யில்
ஐயம்படுங்கசம் போல்வலி யீந்தப்பதி முழுதும்
ஐயம்படுங்கசம் போம்படி செய்தங்கணைந் துபுலன்
ஐயம்படுங்கசங் காட்டினர் நாகையி லற்புதமே.

பாதுகமின்னும் பயனுளவென்றது.

அற்புத னன்றிட்ட கொட்டையிற்பாது கமம்புயத்தான்
அற்புத நன்றிட்ட மாகத்தொட்டீரரி தேர்கரியான்
அற்புத னன்றிட்ட நாகையுமெண்மை யவரிடத்தும்
அற்புத னன்றிட்ட வுள்ளத்துமென்று மலர்ந்தனவே.

சீதலராயத்துட் சிறந்தனவென்றது.

அலர்வனமா மையுருவினர் சீர்த்தியணி கவியின்
அலர்வனமா லைபுனைதலினற் பலவாயத் தன்வாய்
அலர்வனமா யவிரத்தலெவ் வாறினியம் புபமொய்
அலர்வனமா கிழனுனையர் கோன்செய்த வாக்கமிதே.

என்குறையுணரா திருந்திரேலதுநுந்
நன்குறைபெருமை யினயமெனக்குறித்தது.

ஆக்கத்தரும் பிகற்பார்ப்பிணி கொங்கையழித் துப்பின்னர்
ஆக்கத்தரும் பெருஞ்செல்வம் பெற்றீர்முறை யாற்று
மென்சொல்
ஆக்கத்தரும் பயன்காணலை யேலது நும்பெருமை
ஆக்கத்தரும் பியசீர்நாகை வாழரிச் சந்தனமே.

துன்பவினையிற் சுழல்வனேவென்றது.

சந்தனம் போனடையாரிட மேவிட்டுத் தையல்வருஞ்
சந்தனம் போடக்கண்டார் கொடியன்ன தயங்குவனே
சந்தனம் போதகிற்குங் குமஞ்சண்பகந் தாந்தவழ்வ
சந்தனம் போர்த்தமணி மாடநாகை தற்காவலரே.

இன்பநுகர்காட்சி யிதயநயந்தது.

தற்காவல ரரிநாகையர் கோன்மறை தந்திடுமோ
தற்காவல ரசினுக்கா திறத்தகைக் காவரமீ

தற்காவல ரகலக்காட்சி யாக்கொளெத் தன்மையகா
தற்காவல ரணிநுண் டேனுக ரளிதா மெனவே.

வண்டுதூதாக வருந்திக்கேட்டது.

தாமதியாக முடையார்தென் னாகையர்தம் மிடம்போய்
தாமதியாக ருணைப்பெறவெந் துயர்சாற்றிப் பொற்றேன்
தாமதியாக மின்னேவாங்கி வம்பின்கண் சார்பிரபந்
தாமதியாகப் பிணிநீங்கெனச் சஞ்சரீ கங்களே.

வண்பதமாட்சி வழங்கிற்றென்றது.

சரிகங்கணங்குல முன்கைமின்னார் குடைதன் புனலாற்
சரிகங்கணங்குடை வால்வளை முத்துஞ்ச ரோருகமுஞ்
சரிகங்கணங்குளிரிந் திற்சுநா கையர்தாட் டிறமஞ்
சரிகங்கணங்குயர் வேல்வலனுக் கிறைதந் ததுவே.

சொல்லின்கரியே தோற்றிற்றென்றது.

தந்தக்கரி யரரியர் பொற்றேரினர் தம்படைக
தந்தக்கரி யரமர் புரிந்தார்தவ நாகையர்சொல்
தந்தக்கரி யரவராத லானமற்றுஞ் சட்சமையர்
தந்தக்கரி யரடரிக லாலுட்ட கர்ந்தனரே.

மல்லற்கரமே மகிமையதென்றது.

தகரந்தகரந் தகரவி நாகையர் தண்கனிவைத்
தகரந்தகரந் தகரவ யின்றதஞ் சண்டகர்பா
தகரந்தகரந் தகரலநீப் பதஞ்சார் கவிர்சொல்
தகரந்தகரந் தகரமென் றுண்பத்தைத் தட்டுவதே.

ஆக்கத்திருப்பதத் தாண்டகையென்னின்
றீக்கடைக் குணமெலாம் போக்குதி ரென்றது.

தட்டுக்கடை வடிவேலினர் நீதியர்தா பதர்பொன்
தட்டுக்கடை வுபகாரிகடாழ் பதந்தந் தெனின்சி
தட்டுக்கடை குணம்போக்குக மேதித்தடங் கஞ்சங்கு
தட்டுக்கடை வழிதேன்சிந்து நாகைத்தங்குந் துரையே.

செல்வர்வேந்தர் சீர்பலதாங்கிப்
பல்காலுயர்நெறி பார்த்திவவென்றது.

தங்கத் தனத்துடை மன்னவராக்கந் தணியநுங்கீ
தங்கத் தனத்தனென் றேத்தவளர்ந்த துதையலர்மா



தங்கத் தனத்தையரும் பம்புயமெனத் தண்டுகிர்பா
தங்கத் தனத்தடஞ் சூழ்திருநாகைத் தராதிபரே.

சிற்றினவினையது செழியழலகற்றிநும்
பொற்பதப்பந்தர் பூநிழற்றருகென்றது.

தராதரங் கண்டறியாரிடஞ் சார்வதுஞ்சார்ந் தவர்க்கே
தராதரங் கண்டவர்தம்முற வோட்டிநுந்தாண் மலர்ப்பந்
தராதரந் தந்தெனைரட்சிக்க வேண்டுமற்றண் புயப்பூ
தராதரங் கத்தின்முத்தார் வாவிநாகைத் தலத்தரசே.

புதுமையிற்புதுமை புணர்பிணிக்கொம்பருந்
துதிதரற்பாதத் தொடரியல்பென்றது.

தலக்கொப்பரும் புங்கனிசூற்றி தந்ததுஞ்சார்ந் தவன்பார்த்
தலக்கொப்பரும் புதைதன்னிற் புதுமை சலநிதிசூழ்
தலக்கொப்பரும் புமின்சுட்டியி னாகைத் தயாளனென்றே
தலக்கொப்பரும் புகழ்தாங்கனும் பாதத் தருதியதே.

பொய்யொழுக்ககற்றிப் பொங்கறிவெவையு
மெய்பெறவருள்வதும் மேம்புகழென்றது.

தருதிப்பதுங் கவிழிவோங்க மேன்மைதயங்க வெண்ணேந்
தருதிப்பதுங் கம்படிற்றொழுக்கார் தொடர்சார் புவிட்டே
தருதிப்பதுங் கதிநாகைமன் னாகல்விச் சாகரம்
தருதிப்பதுங் கனங்கொள்வதும் நும்புகழ் சாதிப்பதே.

பல்லெக்கழுத்தம் பயில்வர்நண்பகற்றி
நல்லொக்கன்மேலோர் நட்பருள் கென்றது.

சாதிப்படித் தண்டலைத்திரு நாகைத்தலை வதந்தஞ்
சாதிப்படித் தகைகொண்டகங் கொண்டசண் டாளர் நட்பைச்
சாதிப்படித் தகைதட்டின்றி யுள்ளுணர்தன் னைநபே
சாதிப்படித் தலத்துற்றூரி னேடருள் சங்கதமே.

அஃறிணைச்சாதியோ டறைதரவல்லரென்
பகுமொழியுணராப் பான்மை யென்னென்றது.

சங்கந்தரமணி முன்றிலி னாகையர் தாருவண்ட
சங்கந்தரமணிப் புள்ளொடும் பேசுவர் சஞ்சலபா
சங்கந்தரமணி யாவடியே னிதஞ்சாற் றுங்கல்விச்
சங்கந்தரமணி சொல்லுண ராததெந் தந்திரமே.

இரக்குமெளியனை யின்னமுதருளிப்
புரத்தலேதருமப் பொருளிலொன்றென்றது.

தந்திரவாளணி தஞ்சையர் கோன்றரு நாகைநகர்
தந்திரவாளலர் தீபம்வைத் தார்சது வேதவியல்
தந்திரவாளப் பகலான வோதுந்தன் வாயமுதந்
தந்திரவாளனை யுய்வித்த லேதருமத் தகையே.

எங்கும்படர்ந்த வியற் சீருண்டென்
பங்கம்பழிப்பாற் பயமுமின் றென்றது.

மத்தகத்தாழி படுதயி ரொத்த மதிபுன்வினை
மத்தகத்தாசை யுழன்றத னின்மலி நாகையர்சீர்
மத்தகத்தானை யரசர் முடியினு மாமறைநே
மத்தகத்தாதிபர் சிந்தை யிடத்து மலர்ந்தனவே.

அவயவத்தியல்பி னக்கங்கூறி
யுவகைபூண்பா னுள்ளந்தேற்றியது.

மலரளித்தா ரினநூங்குஞ்சியார் புவிமன் பதைபான்
மலரளித்தா அங்கருணைக்கண் ணினார்மைய லற்றநிரு
மலரளித்தா ளுந்திருநாகையார் மலிசீர் பதக்க
மலரளித்தா ளம்பரமே சொரியும்வண் மைக்கையரே.

செறிபகைதருக்கஞ் சிறந்தோருளத்தையு
முறைதவத்தடைவே முடிப்பரென் றுரைத்தது.

மைக்கைதவத் தடையாரையும் வேதம் வழீஇபொறிதீ
மைக்கைதவத தடைசொலலையுந் நாளு மனமதிநன்
மைக்கைதவத் தடையாளருள முமன் னாகையிற்பன்
மைக்கைதவந் தடைவே முடிக்கும் மலினம்படவே.

பற்பலபிணிக்கும் பலன்பெறுநாகை
யற்புதர்வாயுரை யணிமருந்தென்றது.

மலினத்திருகரம் வெண்மேனி செவ்விதழ்மஞ் சண்முகம்
மலினத்திருகண் டமாலை சித்ராங் கம்வரட்சியிரு



மலினத்திருகச மற்றுளநோய்க்கு மருந்து நற்செம்
மலினத்திருகதி நாகையர் வாய்மலர் மந்திரமே.

பருவரலுற்றுப் பாங்கியொடுதலைவர்
தெரிகிலரென்னனச் சேயிழைவினையது

மந்திரங்கா னிறைநாகையின் வாழ்வுடை வன்னற்பலர்
மந்திரங்கா னினைவுள்ளங் கொள்ளார்மம் மராலணிவா
மந்திரங்கா நிறைநாண ழியா வில்வின்மாட் சிமைசு
மந்திரங்கா நிற்பத்தாமதி யாரென்மடக் கொடியே.

ஓசையறிவினோ டுள்ளுணர்வருளும்
நாகையதிபதி நாமமேயென்றது.

மடக்கமடக்க வருமேசக முன்னவல் லூடலின்
மடக்கமடக்க வலைப்பிணி போம்பற் றமற்றுமறி
மடக்கமடக்க வரிற்குண மாமதி மாறுடையார்
மடக்கமடக்க வலியாந்தென் னாகைமன் னாமத்தையே.

பொருணயமெல்லாம் பொலியுமென்கோமான்
கருணையங்கண்ணினுற் கனித்தவர்க்கென்றது.

மன்னுதன வம்பொருளிலைமேலுமகி மையுளார்
மன்னுதன வண்ணிலையுமுன் டாமஞ்ஞை நாரையின்மேன்
மன்னுதன வந்தருபொழி னாகையின் மாதவர்கண்
மன்னுதன வம்பெறுங் கருணைக்கண் மதித்தவர்க்கே.

முறையிலரியல்பை முறைமையென்றுணரா
திறைமொழிபோற்று கவிதயமென்றது.

மதித்தகநீங் துவர்மெய்யுண ரார்புவிமா லுறைதுன்
மதித்தகநீர் மையுடையார் கயவர்மட வியற்சம்
மதித்தகநீ யுழலன்மினன் னாகைமகி பரின்சொன்
மதித்தகநீ தியென்றோர் கமருண்டு மயங்கலையே.

நாகையர்புகழெழி னடுகவஃதே
யோசையின்மரக்கல முடம்பேயென்றது.

மயங்கலக்கப் பலவாக்க முண்டாகம ருட்படச
மயங்கலக்கப் பலனின்றி மெய்யேபவ வாருதியின்
மயங்கலக்கப் பலத்தண்பொ ழினாகையர் மாண்புகழின்
மயங்கலக்கப் பலருங்கரை சேர்க்கும லைவறவே.

உலகெலாங்கலைக்கு மொருமுனைபோன்று
நலனுறுநாம நாயகரென்றது.

மலைவாரணந் திசைப்பாலகர் வானமதி கதிர
மலைவாரணந் திணையெங்குஞ் சிறந்தனவாரி சப்பொம்
மலைவாரணந் திரிதண்புன னாகையர் மாமதுர
மலைவாரணந் திகழ்வாயர் குத்துபெனும் வண்பட்டமே.

மாதர்மயக்க மறுத்தேயொருமை
நீதிவழியினிறுத்துவ ரென்றது.

பட்டம்படாகம் புகழ்முடியார் பொற்பதி யின்பசும்
பட்டம்படாகம் புனைந்தார் மரபினர்பங் கயத்துப்
பட்டம்படாகம் புள்ளூர்திரு நாகையர்பா வையர்கண்
பட்டம்படாகம் காட்டுவரோர் மைப்பய னெறிக்கே.

மருவிழாப்புன்மை மாற்றிவிட்டுயர்த்துத்
திருவிழாநுந்தஞ் சீர்பதமென்றது.

பயனெறித்தீர்த் தறிநீங்கினும் பாதகப்பவ் வமது
பயனெறித்தீர்த் தகத்தாக்கினும் வாவிபன்மே திமடிப்
பயனெறித்தீர்த் தவயனைகைவா மூம்பதி நும்பதம்
பயனெறித்தீர்த் தமன்றோகடத் தேறற்ப யப்பதுவே.

அச்சவுள்ளத் தருந்துயர்நோய்க்கும்
பச்சைப்பொற்கழற் பசுமருந்தென்றது.

பயப்பங்கயப் பலவுந்தியுளா டப்பயி லுடலின்
பயப்பங்கயப் படவாடுவனை பிழைபல் பொறுக்கும்
பயப்பங்கயப் பலனற் கண நாகைப பதிநுமது
பயப்பங்கயப் பதமேயென்ற லேய்க்குப்பசு மருந்தே.

உயிரினமோம்பு மொள்ளியகருணையா
லயர்சுமையிறக்கி யாளுகவென்றது.

பசுமைப்பட லமராவளிக்குந் தகைபா சமணி
பசுமைப்பட லமராமரத்தெய் தச்செய்பன் னறவாற்
பசுமைப்பட லமராம்பொழி னாகைப்பதி யயர்துன்
பசுமைப்பட லமராக்கடத் தேற்றுமிப் பாவியையே.

மனக்கனின்கவலை மாற்றுநும்பொற்
ளெனக்கினிதருளி யிரட்சியென்றது.

பாவியப்பாகப் புனைந்தாலுநன் றும்பரி சுணர்ந்து
பாவியப்பாக னென்றேகொள்ள வேண்டும்பட ரளியன்



பாவியப்பாக ருளின்பொழி னாகைய பாதகவப்
பாவியப்பா கவலைச்சிந்து நுந்தம்ப தமலரே.

முரண்படுநெஞ்சினர் முருசினவெஞ்சினர்
சரண்படும்வென்றித் தார்புயரென்றது.

பதமலங்காரந் தருக்கமுள்ளார் படர்வெஞ் சினச்ச
பதமலங்காரந் தவன்றிறத்தார் வந்துபண் பணியும்
பதமலங்காரந் தரத்தொடர்ந் தேபுகழ்பாத் தநல்ல
பதமலங்காரந் தவழ்புயத்தார் பதிநா கையரே.

நாகையரின்ப நறைபலனளித்தும்
வாகையர் முன்னும் வளந்தர நின்றது.

நாகையருந்தும் பியின்னறவா மழைநந் தனஞ்சூழ்
நாகையருந்தும் பிரபலத்தார் தந்நற் சுவைபின்
நாகையருந்தும் பிரசமன்றோ சுகநல் கியதும்
நாகையருந்தும் பிமன்னருந்தே டகடஞ் செய்வதே.

செல்வரும்புலவருந் திரமோலியரும்
நல்வகைமுகக்கு நனிகழலென்றது.

செய்வனமா தவநாகையர் சீர்பதச் சேகரமே
செய்வனமா தவநாகையர் சீர்பதச் சேகரமே
செய்வனமா தவநாகையர் சீர்பதச் சேகரமே
செய்வனமா தவநாகையர் சீர்பதச் சேகரமே.

கண்டபொழுதே கதிதருமுகத்தை
யுண்டெனிளவியா லுவமித்துரைத்தது.

சேகரந்தாங்கிளர் பங்கயமின்று செல்விற் கதிரின்
சேகரந்தாங்கிருள் மையகனன்று செறிக ழைக்குட்
சேகரந்தாங்கிய னாகையர்கோ னருட்சிந் திக்குநெஞ்
சேகரந்தாங்கி யருட்செயு மெய்மைத் திருமுகமே.

புட்பாணிதம் பொருத்தினீரெளியென்
கட்பாலருட்கண் கணித்திரென்றது.

திருமுகமின்ன தெனவுணர்ந்தே புட்கடிங் கனின்க
திருமுகமின்ன ருட்பெற்றவன் றேதிசை செல்புகழ்மு
திருமுகமின்ன ணிநாகைமன்ற சிற்றடிய வன்பால்
திருமுகமின்ன லங்கண்ணுற் கணித்திரித் தீவினைக்கே.

நந்நபிமரபி னவமணியறிஞர்
தந்நனியுள்ளத் தவமணியென்றது.

தீவினையா வழிகாட்டச் சென்றோர்க்குறு செய்யிதுநந்
தீவினையா வனவெல்லா மொரீஇயசெம் மன்மரபா
தீவினையா வகைகாத்தவ நாகையசீர் மறையின்
தீவினையா வலினோர்பவ ருள்ளச்சிந்தா மணியே.

நாட்டணிகூறி நாகையவின்பம்
பூட்டியவிழியருட் புகற்றருகென்றது.

சிந்தாமணி நிழனீர்நிலை யாம்பற்செந் தாமரைத்தேன்
சிந்தாமணி நிழற்சஞ்சல வோசையிற் றேங்கியுள்ளொ
சிந்தாமணி நிழற்றுஞ்சுநன் னைகையசெங் கணித்தொ
சிந்தாமணி நிழலென்பிணி தீர்தற்குச்செய் திமன்னே.

உட்பகைபுறப்பகை யொக்கமுடித்தே
கொட்புறு திருநெறி கொண்டபொருளென்றது.

செய்தித்தவப் படையாக்கத்தி னற்றிரைவாங் கிக்கரை
செம்தித்தவப் படையாவுலகுண் மலந்தீ வினைக்கை
செய்தித்தவப் படையானையும் வென்றுதிரு வநெறிச்
செய்தித்தவப் படையாளணி நாகைத்தெளிப் பொருளே.

நிலைத்தவெள்ளறிவு நீரேயாகி
லுலைத்தலிற்சுகமே யுடற்கோங்குமென்றது.

தெளிக்கப் பகலவனைத்தே யறிவிற்சி றந்துபன்மைத்
தெளிக்கப் பகலவருபொருளே மழைச்சி தஞ்சந்தந்
தெளிக்கப் பகலருநாகையினும் புகழ்சேர் முரசந்
தெளிக்கப் பகலவிர்வாகைய ராகஞ்செழித் திடுமே.

ஒன்றியபொதியத் துயர்தமிழதனிற்
றென்றற்றூதினைச் சிறப்பக்கூறியது.

செழியனக மலையாய தென்றால்வரு செந்தமிழுஞ்
செழியநக மலையாச்சுடர் கீர்த்திச்சிறந் தமையாற்
செழியனக மலையார்பொழி னைகையர்தே கமெல்லாஞ்
செழியநக மலையாப்புள கந்தொடுசெப் புமின்னே.

நவநிலையமைந்த நாகையின்வள்ள
லவயவத்தன்மையி னக்கங்கூறியது.

செப்பங்களவரும் பாவச்செய் நாகையர் செங்கழலாற்
செப்பங்களவரும் பாலைகடேன் சிந்துந் தீஞ்சொலினற்



செப்பங்களவரும் பாமய மாமுளஞ் செவ்வியினற்
செப்பங்களவரும் பாமுலை மாதர்தி கைப்பதுவே.

வேந்தர்கடொண்டினும் விழுமியதுயர்தீர்
மாந்தர்கள்வாழ்த்தும் வாயுரையென்றது.

திகைப்பல கோடியடர் புகழ்நாகைய செங்கதிரே
திகைப்பல கோடியரசர் கடொண்டினுஞ் சீரிதும்நீ
திகைப்பல கோடியசிந்தையர் துன்பஞ்சி தறியுடல்
திகைப்பல கோடியபோதவர் வாழ்த்துந் திருப்புகழே.

சேயகமேன்மைச் சிறப்பினுலக
நாயகன்கையினது நலநயமுரைத்தது

திருப்புக்கதிவன நாகையர் கோன்மனைச் சென்றெளிய
திருப்புக்கதிவன வாரியி னேகரை சேர்ந்தவங்கந்
திருப்புக்கதிவன சம்பொருங் கைத்திரி தோசமுங்கூ
திருப்புக்கதிவந காகிற் பவங்கந் தெளிதருமே.

என்குணமறியா தென்னெனக்கிளவி
தன்குணப்பாங்கியொடு தான்வினயது

தருமேனி வந்தமலராற் புயலுந் தடமணப்பந்
தருமேநி வந்தகவினற் றென்னுகைத் தலைமையற்பு
தருமேனி வந்தமளித் துனம்வாடத் தமக்குரிமை
தருமேனி வந்தபசலையுங் காண்கிலர் தார்குழலே.

பூரணப்பொருளிற் புகழொடுதோன்றுங்
காரணப்பெயரின் கருத்தறிவித்தது.

தாராதரமதி கந்தரப் பானு தரத்தரத்தண்
தாராதரமதி காலும்ப ரிம்பர் தரப்புகழ்சீர்
தாராதரமதி கவுதென்ன நாகையர் தாங்கருன்பந்
தாராதரமதி காரமென் போறத் தளிப்பவர்க்கே.

ஊர்வளங்கூறி யுயர்போதகஞ்சே
சேர்களிறெந்தி யென்றுகைதொழுதது

தத்தளிக்குஞ் சரத்தாவிசைக் கும்பம்மித் தண்டுளிசிந்
தத்தளிக்குஞ் சரற்றூகிற்ப வோதிமந்தா லொலிபோ
தத்தளிக்குஞ் சரத்தாமரைப் பொய்கைத்தண்
னைகையமோ
தத்தளிக்குஞ் சரத்தாயாதிகன் றெத்ததன் மையற்கே.

ஒண்டொடிவாட்ட முணர்ந்துசெவிலி
கண்டதோழியொடு கையறைகூறியது

தன்மயநாட்டம் பதிநாகை யண்ண றம் பால்வைத்தகா
தன்மயனுட்டம் தனமுஞ்சோ கஞ்சந் தாபமயர்
தன்மயனுட்டந் துயிலாமை யாவுந் தரமகளின்
தன்மயநாட்டங் நலார்க்கென்னை யாங்கொறடங் கண்
ணியே

அண்ணற்பெரும்பதி யணிகொண்மனு
வண்மையின்றன்மை மதித்துரைத்தது.

கண்ணிக் கொடியமுத் தம்மானை யாடுங் கருங்குழற்பூங்
கண்ணிக் கொடியன மின்னார்நன்னைத் தங்கக்கலசங்
கண்ணிக் கொடியம னுருவுதையத் தைக்கண்டவர்தங்
கண்ணிக் கொடியதுயர் நோய்கன்போ மொருகாதமட்டே

அணிகதியுதவு மரியகற்பகமே
கணிகையிற்படா அகாத்தியென்றது.

காதமட்டாயுதம் போல்வெட்டி கஞ்சங் கலந்நடர்ந்து
காதமட்டாயுக ளத்திருக்காலுளங் கைக்கொள் வர்க்கா
காதமட்டாயும றிவோடு காத்தி கனிபொழில
காதமட்டாயுக ளுந்திரு நாகையங் கற்பகமே.

கற்புடைநாயகிக் கண்மணிபேர
கற்பமளித்தெனைக் காத்தியென்றது.

கற்பகத்தா விசைவாளியி வீரநுன் காவலர்சேய்
கற்பகத்தா விசைநாயகி பேரகம் பார்ப்பபல்வி
கற்பகத்தா விசைத்தண் யைனுகைய காய்பிணிதீர்
கற்பகத்தா விசையம்பெற வேழையைக் காத்திமன்னே.

வசந்தகாலத்தும் வளந்திகழஃறினை
யிசைந்தேத்துவ்நும் மிசையேயென்றது.

காத்திகைத்தே தத்தகத்தை கொக்கொக்கக் கதத்துக்
கொத்திக்
காத்திகைத்தே துத்தகத்தி தக்கீதத்தகத் துக்கொத்துக்
காத்திகைத்தே தொத்தித்தா துகத்தித்தித்தகா
தத்தைத்தேக்
காத்திகைத்தே தத்தித்தூ தத்தநாகைக் கத்தாத்துதியே.



பல்வளநாட்டணி பதிநாகூர்
கல்வியினருட்கடை கனித்தியென்றது.

கத்தாதவ னகைப்பாலனுந் தேனுங்கனி கடுன்ன
கத்தாதவ னகைப்பாலனு காக்கடா வையமோ
கத்தாதவ னகைப்பாலனே வேலைக்கருக் தன்சமு
கத்தாதவ னகைப்பாலனி நட்சிகைடக் கனித்தே.

பம்மியவெறுமை பவப்பிணிவிலற்றின்
வெம்மையகற்றும் விழைபுயலென்றது.

கணித்திலம் பாடுமனக் கனிப்பாலெனமைக் காய்ந்துபவங்
கணித்திலம் பாடுமடா வென்றவாற்கள கத்தின்மணி
கணித்திலம் பாடுமரகத நீலங்கதிர் செய்பல
கணித்திலம் பாடுமலை பொருநாகைக் கரும்புயலே.

நாட்டணிகூறி கனிபுகழ்தலைமைச்
சூட்டணிகுருவின் றென்மையுரைத்தது

கரும்புங் கமலமுந்தக முத்தெனமுயர் கைவிறைக்குங்
கரும்புங் கமலமுந்தங் கண்ணுழைக்கியர் கார்குழற்க
கரும்புங் கமலமுந்தம் பனிநாகையர் காசிகுறூர்
கரும்புங் கமலமுந்தல் விக்சூடினர் கைப்பின்னையே.

துயர்பலநீக்கித் தொல்லைவடிவி
னயனருள்சஞ்சீவி நாகைத்தியென்றது

கைப்பிணியாகத் தரும்புனல் வைப்பிற் கலையுந்தி
கைப்பிணியாகத் தரும்பாது வன்மை களமெழின
கைப்பிணியாகத் தரும்பஞ் சஞ்சீவி கருத்துணர்மி
கைப்பிணியாகத் தரும்பணி நாகைக் கலாமதியே.

நீள்வினைவிருளறச் செழுங்கதிர்விரிக்கும்
மாவினையினக்கு மதியென்றுவரித்தது.

கலாமதிகாரம் பொருளைம விரோதங் களவுகயம்
கலாமதிகார மையாவினை யாவுங் கரக்கிடப்பு
கலாமதிகார மணிவிளக் காங்கலைக் காளமத
கலாமதிகாரம் பொழிலணி நாகைக் கதிக்கரசே.

கற்றோருளத்துங் காசினிநாகையு
மூற்றோரதின் னுயர்கடவென்றது.

கதிக்குந்திரு வினையுள்ளா ரெனியர்கலா ரென்றசங்
கதிக்குந்திரு வினையப்படி செய்தவகாக் கும்பர

கதிக்குந்திரு வினையோருணர் வாளர்கருத் துமல
கதிக்குந்திரு வினைநாகையு மோங்குங்கலைக் கடலே.

இபுலிசவரப்பெண் ணிவ்வுலகிவற்றிற்
கபயநுந்தாளடைந் தேனென்றது.

கலைக்கவருந்தகை கேடனுமுள்ளக் கருத்தும் பொன்மே
கலைக்கவருந்தகை மாதரும்பூ தனிகற் பத்தினி
கலைக்கவருந்தகை யப்புகுர் தேன்கதிர் மாடநிறம்
கலைக்கவருந்தகை நாகைமன்னு நுந்தங் காவிடத்தே.

எழிறருங்காவ லிறைசொல்லுள்ளார்
கழிதரமொழியார் கனவினுமென்றது.

காலுமுன ரியம்பார்புனல் விண்ணுங்கலப் புடறிக்
காலுமுன ரியம்பாழ்ங்குழி சேர்கலர்கா நறைவாய்க்
காலுமுன ரியம்பார்வய னைகைக்கருத்தர் சொல்லெக்
காலுமுன ரியம்பார்முறை பேதங்கள வினுமே.

இத்தகைச்சிறைநீத் தெளியனைநுந்தா
ளுத்தமக்காப்பி னுய்த்திரேன்றது.

கனவிலங்காவல வாச்சிறைமே லெண்ணங் கண்டனைமிக்
கனவிலங்காவலங் கோட்டைத் துயரங்கடத் திருந்தாட்
கனவிலங்காவல கத்தாக்கி யாளிர்கனி யும்புள்ளும்
கனவிலங்காவலங் கொட்டுந்தண் ணைகைக் கதிர்விளக்கே.

சித்தியிலாதவென் சிந்தையிடத்தினும்
மித்திரன்போலருள் வித்திரேன்றிரந்தது.

விளக்கந்தரத் தரத்தேரூது சிந்தைமிக வெருவி
விளக்கந்தரத் தரத்தோலுண் கனியின் வெறியமலர்
விளக்கந்தரத் தரத்தார் பொழினைகைய வேண்டினனும்
விளக்கந்தரத் தரத்தாதவன் போலருள் வித்திடலே.

நாகைவிளங்க நன்னினரின்பப்
பாகினிதருள்வான் பாடினனென்றது.

வித்தாரமான நிறைதேன் றவழ்ந்தபொன் மெய்வனைகு
வித்தாரமான முடனர் செய்நாகை விளங்கவுற்ப
வித்தாரமான வருள்சு கமேதர விச்சித்திர
வித்தாரமான கவிமாலை சூட்டினன்வேண் டிக்கொண்டே.



பசப்புறுகோலம் பார்த்திவராலென்
நிசைத்தயாகிற்பா னேந்திழையென்றது.

கொண்டற் கனிக்குங்கடற் குமதிக்குங் குயிற்குமடர்
கொண்டற் கனிக்குமலர்க் குமலர்குங் குழற்குந்திகை
கொண்டற் கனிக்குமயர் வாள்பசலைக் குணம்பலவுங்
கொண்டற் கனிக்குந்திரு நாகையார்செய்த கோல
மென்றே.

அறிவுளங்கலங்கு மந்தகர் தமக்கோர்
நெறிதருமூற்றுக்கோ னிர்மையிரேன்றது.

கோலந்தகரங் கடுக்குங்கண் மாதர்கொங் காசலத்தின்
கோலந்தகரங் கலைக்கடற்பங் குற்றுக்கொள் வழிக்கிற்
கோலந்தகரங் கனையர்த யானைநற் குங்குமந்தக்
கோலந்தகரங் கமழ்பொழி னைகையங் கோக்களிறே.

ஒங்குமெண்டிசைமா வூக்கியகொற்றவ
தாங்குநுங்கையாற் றமியனையென்றது.

கோக்குஞ் சரமணிப் பூண்டகையாட்குக் குழந்தையுமக்
கோக்குஞ் சரமணி யாக்கையுமீந்துயர் கொற்றமெட்டுக்
கோக்குஞ் சரமணி நாகைமன்னுதுயர் கொண்டுழலிக்
கோக்குஞ் சரமணிக் கையாலெடுத்துக் கொளக்கடனே.

ஆங்கைக்கிழிகுண மகற்றிதன்மையி
னூக்கம்புரிய வுதவிசெய்கென்றது.

கடனிறைவே ழந்தருநிதிச் செல்வர் கடிகமழ்பூங்
கடனிறைவே ழந்தடப்பொழி நாகைய காத்தருளிர்
கடனிறைவே ழந்தவழுடல் வாய்மைக மைதயைசீர்
கடனிறைவே ழந்தருமங் கள்பூண்டு களிப்புறவே.

அன்னலெணிகழ லரவிந்தம்பூத்தற்கென்
கண்ணுங்கருத்துங் களியிடனென்றது.

களிப்புண்ட ரீகமலம் வரும்வேலர் கயறடிமான்
களிப்புண்ட ரீகமலர் புகழார்வழி கான்கெழுதீங்
களிப்புண்ட ரீகமலர் வனநாகையர் காலிணையாங்
களிப்புண்ட ரீகமலர் வதென்கண்ணுங் கருத்திலுமே.

காரணர்மரபார் கண்ணோக்குறுமேற்
சீரணம்பிணிபல செல்லுமென்றது.

கருத்துவக்குங் கடியாம்வினை யன்றுகன வெனவெக்
கருத்துவக்குங் கடியாகச் செய்தார்வழி கார்புகைய
கருத்துவக்குங் கடியார்மனை நாகையர்கண் ணுறிற்பு
கருத்துவக்குங் கடியாதனை யுஞ்செல்லுங் கைகண்டதே.

பல்பிணிகண்டித்துப் பண்பினதாக்கை
நல்குதிர்கோடையி னுயகவென்றது.

கண்டங்கந் தானவிடத்து மற்றுள்ள கடும்பிணியுங்
கண்டங்கந் தானவியல் போடருளிர்க பாடலினைக்
கண்டங்கந் தானவிரா லயநாகையிற் கற்றவர்சொற்
கண்டங்கந் தாகவியந் திகழ்சீர்புனை காரணரே.

குரிசின்மணத்தாற் குளிர்ந்துளம்விகாரப்
பொருள்பலவொழுகிப் புகழுமென்றது.

காரணங்காட்டுக் குபிரர்பொற் றேர்செலக் கற்பித்துமுற்
காரணங்காட்டுக் குரிசினன் னாகையர் கான்கலந்தாற்
காரணங்காட்டுக் குயிலுமளியுந் தென்காலு மன்றிக்
காரணங்காட்டுக் குணமுமன முங்கைவா ரத்தவே.

துயர்தருந்துன்பச் சூனையர்சூங்கர்
மயலனுகாது மறுத்தியென்றுரைத்தது.

வாரத்தன மடவாவிய போன்றவரி விழிபொன்
வாரத்தன மடவார்மயல் வேண்டுங்கொல்வாண் மதியால்
வாரத்தன மடவாவியந் தண்வயன்மா மணியும்
வாரத்தன மடவாவரு னாகைவண்டார் வன்னலே.

வன்னஎழுத வசனத்துலகத்
துன்னபொருடிரு வொருங்கெய்துமென்றது.

வண்டார மரத்தவம்பகத் தார்முகமா னும்வென்னை
வண்டார மரத்தவம்புய நீர்மரவம் மகின்மொய்
வண்டார மரத்தவம்பொழி னாகையர்வா யமுதால்
வாண்டார மரத்தவம்புவிச் செல்வமும் வாய்ப்பதுவே.

சில்வினைத்தொழிற்கட் சீத்தொருமைப்பா
னல்வினைத்தருமிறை நனிமொழியென்றது.

வாய்ப்புள கத்தர்கனி தர்சரத்தர் வலியுடற்பேய்
வாய்ப்புள கத்தர்கரு மமகற்றிம றைப்பொருளின்



வாய்ப்புள கத்தர்கனங் குணந்தந்த துவல்லவன்றன்
வாய்ப்புள கத்தர்கதி நாகையாரிசை வாக்கணியே.

நன்னயநாகை நாயகருவகை
யின்னனபொருளி னியல்பினதென்றது.

வாக்கணியா தவனுநிதி யாமதியாம் புகழ்மு
வாக்கணியா தவனுமமு தாமருந்தா மகிலு
வாக்கணியா தவநாகத்தின் வாசர்மனத் திலுன்ன
வாக்கணியா தவநாகைய ரோகைமக ரந்தமே.

அருப்பொருள்கண்ட வாண்டகையடிமை
விருப்பத்துயர்தந்த விழுமமென்னென்றது.

மகரந்த வாசங் கலைகடற்றீவந்து மானுறைவோர்
மகரந்த வாசங் கனம்பொருள்கண் டவர்வண்பொழிற்பூ
மகரந்த வாசங் கமழ்நாகையாரடி மைத்துயர்விம்
மகரந்த வாசங் கதங்கொளலாங்கோலிவ் வையகமே.

ஏழைதுயர்தீர்ந் தேத்துநற்கென்றும்
வாழிநுஞ்சரண் வையகத்தென்றது.

வையம்படருந் திருக்கன்னை கெற்பத்துன் வாழ்பொழுதூர்
வையம்படருந் திருக்கரை வென்றவ வாழிசரண்
வையம்படருந் திருக்கடர் நோயுமறுத் துயர்செவ்
வையம்படருந் திருக்கவு நாகைவந் திக்கவுமே.

இன்கனிந் தருள்கநும் மிரும்புயஞ்சிறக்கும்
பொன்குங் குமத் தொடை புல்வற்கென்றது.

வந்திக்களிக்குங் குணமகப் பெற்றென வாழியநும்
வந்திக்களிக்குங் குமத்தொடை பீதிர்வன் னாகையினை
வந்திக்களிக்குங் குலமன்னர் முன்னுமரு ளுளத்தும்
வந்திக்களிக்குங் குளிர்மருந் தாற்றுமிவ் வல்லமைத்தே.

பிணியிருளகற்றிப் பிரகாசிக்கு
மணிவிளக்காதிர்நும் மருங்கவிக்கென்றது.

வல்லமைகும்ப வனமுலை மாதரு மாற்றவினை
வல்லமைகும்ப வனக்கோ வைபாண்டு மன்முலமெனும்
வல்லமைகும்ப வனத்துழ லாதுவ ழிவிளக்கின்
வல்லமைகும்ப வனநாகை யேத்தி வருங்கவிக்கே.

நன்னயமருணெறி நடப்பவிவ்வுடற்கு
மின்னருள்காட்சி யெழிலுண வென்றது.

கவிக்கனம்பா நிழலார்மறை நேர்வழிகான் மதுவிக்
கவிக்கநம்பா விழலானாட்டி னரக்கவி யியல்பா
கவிக்கனம்பா விழலார்கனி யாக்கைக்குங் காட்சிமிந்தைக்
கவிக்கனம்பா விழலார்மதி னலைக்கல் வித்தருவே.

கல்லொடுபகர்ந்த காரணக்குரிசிற்சீர்
புல்லியநுங்கழற் புகலிடமென்றது.

கல்வித்த வாரணமா வலர்கானக் கவியுரைபு
கல்வித்த வாரணமா விழிநோயகல் வித்துடற்கி
கல்வித்த வாரணமா நிதியெற்குங் கமழ்கழற்பு
கல்வித்த வாரணமா நாகைசாருங் கமீதொலியே.

நந்நபியாணை நாயகநுங்கையா
லென்முக நீசி யிரட்சிப்பீரென்றது.

கமீதுவைபூம் பதமென்றுணர் தற்கருங் காரணர்ச
கமீதுவைபூம் பதத்தாணை பொன்னேயத் துயர்கட்டறமு
கமீதுவைபூம் பதத்தன்கரமேதறை காண்மலர
கமீதுவைபூம் பதக்காநா கைவாழ்அப் துல்காதிருவே.

மாண்டகைதாய் தந்தை மனைகிளைநண்பெல்லா
மாண்டகையாணைநும் மடைக்கலமென்றது.

காதிருவேதவ கைநுகரோர் நண்பர்கா தனுன்னிங்
காதிருவேதவ வாய்தந்தை சுற்றங்க முனைவிட்டே
காதிருவேதவ மிக்கடியே னுங்கடி கமழ்பூங்
காதிருவேதவ நாகையவாணை நுங்கை யடையே.

பொருத்துநுங்கருணைப் பொருளேயன்றி
மருத்துவமின்று மாதவமேயென்றது.

கையடையார் கரந்தன்ன முதாக்கினிர் கான்மலர்வா
கையடையார் கரந்தாப்பொழி னுலையகற் றவராக்
கையடையார் கரந்தார்நும் மையன்றினிக் காமருந்தின்
கையடையார் கரப்தந்தருள் வாரெங்கண் மாதவமே.

முற்றிற்று.